ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் க. ருத்ரோத்காரிஷு மாசிமீ 1924 பிப்ரவரி இதழ் எ

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	311
2.	ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் துதி ...	312
3.	ஆன்ம லக்ஷணம்	313
4.	செவ்வாயில் கால்வாய்கள் ...	320
5.	சம்பாபதி	323
6.	திருமடந்தை சீர் பரவல்	327
7.	குறைவற்ற செல்வம்	331
8.	கதர்ப் பாட்டு	334
9.	ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்	335
10.	குசால் சிங்காரம் அல்லது பரிஷ்காரக்கூத்து	339
11.	பக்கிள் துரை	347
12.	காலஞ் சென்ற அகமத் தம்பி மரக்காயர் ...	351
13.	நித்திரை	352
14.	தொழில்	353
15.	பிளேக் அல்லது மகாமாரி ...	355
16.	விசேஷக் குறிப்புகள்	356
17.	மதிப்புரைகள்	358

சித்திரப் படங்கள்.

1. மதுரை மீனாக்ஷி அம்மன் கோவில் கீழக்கோபுரம்.

2. வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரியார். தி. ரங்காச்சாரியார். திவான் ராகவையா.

210335

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரூ. 2.
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட	சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ. 2-8.
உயர்ந்த பதிப்பு (Art Paper)	... ...	ரூ. 10

தனிப்பிரதி 4 அணா.

விளம்பரம்

பக்கம் 1-க்கு மாதம் ஒரு முறைக்கு ரூ. 20. நீடித்து விளம்பரம் செய்வோர் நேரே எழுதிக்கொள்ளவும்.

சந்தாதாரர்கள் ஒவ்வொரு கடிதத்திலும் சந்தா நம்பரைக் குறித்து எழுதவேண்டும்.

பிரதி இங்கிலீஷ் மாதம் மூன்றவது வார முடிவில் நமது சஞ்சிகை வெளிவரும்.

மானேஜர்.

இலங்கை நேயர்களுக்கு!

நமது 'லக்ஷ்மி'க்கு சந்தாதார்களைச் சேர்க்கும் பொருட்டு நமது ஏஜன்று ஸ்ரீமான் **A. M. G.** நாயுடுவை இலங்கைக்கு அனுப்பி யிருப்பதால், நமது சந்தாநேயர்கள் அவருக்கு வேண்டிய உதவி செய்வதோடு புதிய சந்தாதாரர்கள் சேர்த்து கொடுக்கவும் வேண்டுகிறோம். அவர் தற்சமயம் கொழும்பில் இருக்கிறார். யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு 2 வாரத்தில் போவார்

நன்றி கூறல்.

இதுவரை 356 சந்தாதார்களை சேர்த்தனுப்பிய இலங்கை ஸ்ரீமான் A. D. நல்லவேலு அவர்களுக்கும் ஒரு மாதத்துக்குள் 50 சந்தாதார்களைச் சேர்த்தனுப்பிய கோலாலம்பூர் ஸ்ரீமான் பழனிசாமி சேர்வை யவர்களுக்கும் நமது மனமார்ந்த வந்தனம் செலுத்துகிறோம்.

மானேஜர் :

லக்ஷ்மி.

ஓம்

லக்ஷ்மி துதி

தூயவர் இல்லறத் தாக்கமென்
  கோ ? தெய்வச் சோதிமின்னார்
ஆயவர் இல்லறத் தெய்வமென்
  கோ ? எற்கும் ஆர்க்கும் பெற்ற
தாயவர் இல்லறத் தா ணுவென்
  கோ ? பஞ்ச தாருவென்கோ ?
மாயவர் இல்லறத் தாள் எம்பிராட்
  டியை வாக் குவந்தே.

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் துதி.

அடியார்செய் தவப்பயனால் நினைத்தமாத் திரைமுத்தி யளிக்குஞ் [சீர்த்தி

குடியாக விளங்கருணை நகருதித்துக், குறிஞ்சிமகிழ் குமர வேளின்
கடியார்பூங் கழற்புணையைக் கொண்டு பவ ஜலராசி கடந்தன் னோன் [பால்

*ஒடியாநலுபதேசஞ் செபமாலை யிவைபெற்றேஉயர்ந்தோன்யாவன்?

பச்சைமயில் வாகனமும் வடிவேலுங் குக்குடமும் பாடல் தோறும்
வைச்ச திருப் புகழ்ப் பாக்கள் பதினாறு யிரம்பாடி, வாது செய்த [ம்
விச்சைநிறை வில்லிபுத்தூர்ப் புலவருள மிக நாண வேண்டுவோர்த
இச்சையெலாம் நிறை கந்த ரந்தாதி யெனுநூலை யிசைத் தோன் [யாவன்? 2

எந்தைதிரு வடிவினொளி நினைந்துநினைந் துருகியவன் எழிலின் வண் [ணம்
கந்தரலங் கார மெனக் கலித்துறையாற் பாடி யதைக் கண்டோ [ரெல்லாஞ்

செந்தமிழி னணியிதுவோ கந்தபிரா னணியிதுவோ தெரிகிலேமென்
றந்தமிலா அதிசயத்தை எந்நாளு முறச்செய்த அன்பன் யாவன்? 3

பின்னரொரு நாள்சம்பந் தாண்டா னென் பானொருவன் பேச்சைக் [கேட்ட

மன்னர்பிர புடதேவ மாராஜ ருளமாட மயிலின் மீதே
தன்னிகரி லாக்கந்த வேள்திருக்கை வேல்விளங்கச் சபையில் வந்து
முன்னருறச் செய்தமகா தவப்புலமை நிறைசெல்வ முன் னோன் யா [வன்? 4

கிளியுருவிற் பொன்னுலகம் புகுந்துமலர் கொடுவந்த கீர்த்தி யுற்று
வெளியுருவிற் கலவாது மாதேவி திருக்கரத்தில் விளங்க நின்று
கிளியுருவிற் றிகழ்ந்தே நங் கந்தரநு பூதிசொல்லிக் கேடில் லாத
ஒளியுருவச் சீர்பாத வகுப் பாதி பாடியே உயர்ந்தோன் யாவன்? 5

அவனே எங் குலதெய்வம் அவனே எம் உயிர்த்துணைவனாகும்; [நாளும்

அவன் கழலே வாழ்த்துவோம்; அவனருளே நாடுவோம்; அவன்பா [தச்சீர்

நவ நவமாய்ப் புகழ்ந்து மகிழ்ந் தாடுவோம்; பாடுவோம்; நாடி நாடி
தவமுதல்வா அருணகிரி யப்பா என் றழைத்திடுவோம் தவத்தைச் [சார்வோம். 6

21-1-1924. வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம்.ஏ.

---

* ஒடியா=கெடாத, அழிவிலாத; நல்=உபதேசம்.

ஆன்மலக்ஷணம்

ஸ்ரீமாந் பண்டித சி. வீரவாகு பிள்ளையவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள் அல்லது உயிர்கள் என்பன என்றைக்கும் அழிவதில்லை. கடவுளைப்போல் அவை அநாதியாயும் இயல்பாகவே அறிவுடையவாயும் உள்ளன. ஆனால் கடவுளுடைய அறிவு எதனாலும் மறைக்கப்படவில்லை. உயிர்களின் அறிவோ ஆணவமலம் என்ற ஒரு இருளுக்கு ஒப்பான பொருளால் மறைக்கப்பட்டுக் கல்லைப்போல அறிவு விளக்கமில்லாமல் இருக்கின்றது. இருள் ஒன்றாயிருந்தும் பல கண்களையும் மறைத்து விடுவது போல அந்த ஆணவமலமும் தான் ஒன்றாயிருந்தும் பல ஆன்மாக்களையும் மறைத்து அவற்றின் அறிவு சிறிதும் விளங்காதபடி தடைசெய்கின்றது.

இப்படி அது பல உயிர்களின் அறிவையும் மறைக்கும் வல்லமை உடையதாயிருந்தாலும் கடவுளின் அறிவைத் தடை செய்ய அதற்குக் கூடவில்லை. அவருடைய அறிவு கோடி சூரியர்கள் ஒருங்கு கூடி ஒளி செய்தாற் போலப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. சூரியர்களை ஒளி செய்யாதபடி இருள் தடுத்து விட முடியுமா? முடியாது. அது போல இறைவனது அறிவையும் ஆணவமலம் தடுக்க வலியில்லாது போயிற்று.

மேலும் ஒரு காலத்திலே தானே உயிர்களும் இருந்தன; கடவுள் பொருளும் இருந்தது. உயிரும் அறிவுடைப் பொருள்; உயிர்களை மறைத்த ஆணவமலம் கடவுளை என் மறைக்கவில்லை என்று நினைக்கலாம். செம்பும், பசிய பொன்னும் ஒரே காலத்தில் தான் தோன்றின; ஜாதியிலும் வேறுபாடு இல்லை. ஆனால் செம்பில் தோன்றும் களிம்பு பொன்னைப் பற்றுவதில்லை. அது போலத் தோன்றிய காலத்தாலும் பொருளாலும் உயிர் கடவுள் என்ற இரண்டிற்கும் பேதமில்லையானாலும் குணத்தில்

வேற்றுமை பனையளவு இருப்பதால் அது இறைவனைத் தொட வலியிழந்து உயிரைப் பொருந்துவதாயிற்று.

உயிர்கள் எண்ணுக் கடங்குவன வல்ல. கரிய கடற்கரையிலுள்ள நுண்ணிய மணலையேனும் எண்ணி இவ்வளவென்று சொல்லலாம். உயிர்களை எண்ணிச் சொல்லுதல் எவராலும் முடியாது. ஆனால் ஒருசிலர் 'ஆன்மா' பல என்று சொல்லுதல் தவறு. சந்திரன் ஒருவனே நீர் நிறைந்த குடங்கள் தோறும் வேறு வேறாகக் காணப்படுதல் போல பிரமமாகிய ஆன்மா ஒன்றே பல வேறு உடம்புகளோடுங் கூடிப் பல ஆன்மாக்கள் போலக் காணப் படுகின்றது. வேதமும், வேத முடிவும் 'ஆன்மா ஒன்று' என்று தான் முடிவுகட்டியிருக்கின்றன. அதனை அறிந்த நாங்களெல்லாம் வேதாந்திகள் என்று சொல்லி வருகிறார்கள். இவர்களுக்கு ஆதாரம் வேதமும், வேத முடிவாகிய உபநிஷதங்களுமே. அவை இவர்களை ஆதரிக்கவில்லை என்பதற்கு ஸ்தாலிபுலாக நியாயமாக ஒன்று சொல்லுவோம்.

வேதங்களிலே முதலாவதான *'ரிக்'வேதமும், உபநிஷதங்களிலே முண்டகம் என்ற § உபநிஷதமும், சுவேதாசுவதரம் என்ற உபநிஷதமும் ¶'ஆன்மா ஒன்று அல்ல; பல' என்பதைப் பசுமரத்தாணிபோல நிலைநிறுத்துவதற்கு

த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமானம்
வ்ருக்ஷாம் பரிஷஸ்வஜாதே
தயாரன்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தியயன ஸ்நந்நயோ
அபிசாகஸீதி

என்ற இந்த வாக்கியம் கட்டளையிடுகின்றன. அதன் பொருள் 'நீல வானத்தைத் தீண்டும்படி பசிய இலைகளடர்ந்து வளர்ந்த ஒரு அரசமரம் இருந்தது. அதில் இரண்டு பறவைகள் வாழ்ந்து வந்தன. ஒன்று அதன் உச்சிக் கிளையில் இருந்து சூழப் பார்த்துக் கொண்டு அசையாமல் சாக்ஷி மாத்திரையாயிருந்தது. இன்னொன்று அதன் அடியிலே பரந்த கிளைகளிலே அலைந்து தேடி அறக் கனிந்த பழங்களைப் புசித்து வாழ்ந்து வந்தது' என்பது. இதிலே அசையாமல் பார்த்துக்கொண்டு சாக்ஷிமாத்திரை

* I. 164. 20. § (iii) 1. ¶ (iv). 6.

யாயிருந்த பறவை கடவுளும், பழங்களை உண்டு திரியும் பறவை ஆன்மாவு மாகும். இதனால் கடவுளும் அவருக்கு அடிமை பூண்டு இன்பம் நுகரும் ஆன்மாவும் வேறு வேறு என்பது நமக்கு நன்றாக விளங்கியது.

மேலும், எல்லையில்லாத தூய அறிவே வடிவமாக உடைய கடவுள் நம்மைப் போல மறந்து மறந்து அறியுமா? செத்துச் செத்துப் பிறக்குமா? நோயும் வாயுமாய் வருந்துமா? மனைவியே! மக்களே! மண்ணே! பொன்னே! என்று ஓயாமல் எண்ணிக் கவலையுறுமா? இவை யெல்லாம் சிந்தியாது வீணே சிற்றறிவும் சிறுதொழிலும் உடைய ஆன்மாவைப் பேரறிவும் பெருஞ் செயலும் புரியும் கடவுளாகக் கருதி எல்லாம் பிரமமயம் என்று கூறுதல் பெரும் பாவமாகும்.

ஆன்மாவானது பளிங்குக் கல்லைப்போல எந்தப்பொருளைச் சேர்ந்ததோ அந்தப் பொருளின் குணமாக மாறுகிறது. பளிங்குக் கல்லுக்குத் தனக்கென ஒரு நிறம் இல்லை. அது எந்த நிறத்தைச் சேர்ந்ததோ அந்த நிறமாக மாறும். சிவப்பு நிறத்தைச் சேர்ந்தால் சிவப்பாயிருக்கும்; நீல நிறத்தைச் சேர்ந்தால் நீலமா யிருக்கும். ஆகவே ஆன்மாவும் இப்பொழுது ஆணவ மலத்தைச் சார்ந்திருக்கிறது. ஆணவ மலமோ அறிவில்லாத இருள்; அதுவும் அறிவில்லாத இருளாய்த் துன்பத்தில் சிக்கி நாளும் வருந்தத் தலைப்பட்டது. மோக்ஷத்திலே ஆன்மா சிவத்தைச் சார்ந்து நிற்கும். சிவமே அறிவாகாரமான இன்பப் பொருள்; அதுவும் அறிவு மயமாகி ஆனந்த நிலையிலே தன்னையும் மறந்து மகிழ்கின்றது. இது கருதியே தாயுமானவ சுவாமிகளும்

'ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ'

என்று அருளுவ தாயிற்று.

இருட்டிலிருக்கும் ஒருவனுக்கு விளக்கு உதவி செய்வது போல ஆணவ மலத்தால் அறிவிழந்த உயிருக்குச் சரீரமானது அதன் அறிவைச் சிறிது விளக்குகிறது. சரீரம் இல்லாமற் போனால் ஆன்மா எதையும் அறியும் வலியுடைய தன்று. இதை நாம் பிரத்தியக்ஷ அனுபவத்தி

னுலேயே தெரிந்து கொள்ளலாம். கண் பூவாத பச்சைக் குழந்தை தன் தாயின் மடியிலேயே யிருந்த தாயினும், அவள் சுந்தர முகத்தையும் சுற்றியுள்ள அழகிய பொருள் களையும் கண்டதா? இல்லை; கண்ணுறுப்பு வளர்ந்து வலி யுற்ற பின்பே அறிகிறது. கண்ணிழந்த ஒருவன் சூரியன் தோன்றும் போதும் அஸ்தமிக்கும் போதும் வானத்தில் காணப்படும் விசித்திரங்களை அறிவதில்லை. காது இழந்த ஒருவன் வீணையின் நரம்பிலே யிருந்து எழும் இனிய இசையைக் கேட்டு ஆனந்திப்ப தில்லை.

அங்ஙன மாகவும் சிலர் இயற்கையி லேயே சுயம் பிர காசமா யுள்ள ஆன்மா சரீர சேர்க்கையால் அறி விழந்து விட்டது என்கிறார்கள். இது என்ன விந்தை? ஜல தோஷத்தினுல் நாசி அடைபட்டிருந்தால் நல்ல வாசனை வீசினுலும் கெட்ட வாசனை வீசினுலும் தெரியாமல் இருப்பதை நாம் நாள் தோறும் பார்க்கிறேம். அதற்குக் காரணமென்ன? நீர்ப்பிடிப்பினுல் நாசி நமக்கு உதவாமற் போனதல்லவா? இதையாவது அவர் சிந்தித்துப் பார்க்கக் கூடாதா? அவரைக் குறைசொல்லி என்ன செய்ய! அழுந்திப் பாராத தினுல் ஏற்பட்ட தோஷமது. இனியாவது அவர் ஊன்றிப்பார்த்து ஆன்மாவுக்கு அறிவை விளக்குவது சரீரமே என்பதுவும், மறைப்பைச்செய்வது ஒன்று உண்டு, அது ஆணவமலம் என்பதுவும் அறிவாராக.

ஆன்மாக்கள் தாம் செய்த வினைக்கீடாகப் பல சரீரங் களை எடுக்கின்றன. அவற்றுள் எல்லாம் சிறந்தது நமது மனித சரீரமே யாகும். இது ஆன்மா. பல பிறப்புக்களி லும் செய்த புண்ணிய விசேடத்தினுலே கிடைப்பதாகும். மனித சரீரத்தை ஒருவன் அடைவது 'கடலைக்கையால் நீந்திக் கரையேறுவதை ஒக்கும்' என்று அருணந்திசிவம் சிவஞான சித்தியில் அருளிச்செய்தது. இங்ஙனம் அருமை யாகக் கிடைத்த மனித சரீரத்தால் ஒருவன் அடைய வேண்டுவது கேவலம் உலக இன்பம் அல்ல; அது இன்று இருந்து நாளை அழியும்; இன்பம் போலத் தோன்றித் துன்பமாய் முடியும். ஆகவே என்றும் நிலையாக உள்ள மோக்ஷ இன்பத்தை அடையவே ஆசை கொள்ளவேண் டும். மோக்ஷ இன்பமும் சிவஞானம் ஒன்றினுலேயே சித்திப்பதாகும். வேறு எந்த ஞானமும் அதனைத்தரும்

வல்லமை உடையதன்று. இதனையே சுவேதாசுவதரம் என்ற உபநிஷதம்

* "யதா சர்மவதாகாஸம் வேஷ்டயிஷ்யந்தி மாநவா:
ததா ஸிவமவிக்ஞாய து:கஸ்யாந்தோ பவிஷ்யதி"

எவன் ஒருவன் வானத்தைத் தோலாகச் சுருட்டுகிறானோ அவனே சிவத்தை அறியாமல் துக்க நீக்கத்தை அடைகிறான் என்று எதிர்மறை முகத்தால் வலியுறுத்திக் கூறுவதாயிற்று.

இனி இங்ஙனம் சிவஞானம் கைகூடப் பெற்ற ஆன்மா மோக்ஷமடையும் விதத்தைச் சிறிது கூறி அவ்வளவோடு நமது கட்டுரையை முடிப்போம். அரசன் ஒருவனுக்கு ஒரு ஆண்மகவு பிறந்தது. சோதிட நூல்வல்ல புலவர்கள் 'அது பிறந்த நாளால் தாய்க்கும் தந்தைக்கும் ஆகாது. ஆகையால் ஒருபதினைந்து வருஷம் அதன் கண்ணில் விழியாமல் இருப்பது நல்லது' என்றார்கள். அது கேட்ட அரசன் அந்தப்பச்சைக் குழந்தையைத் தன் நாட்டை அடுத்துள்ள காட்டிலே வசிக்கும் வேடச்சேரியிலே வளரவிட்டு விடும்படி கட்டளையிட்டான். அப்படியே ஒரு ஏவலாளன் அந்தப் பாலகனை எடுத்துக் கொண்டுபோய் வேடர் தலைவன் ஒருவனிடத்திலே விட்டுவந்தான். மன்னன் மனக்கினிய மகனாய்ப் பிறந்தும் அவன் ஒரு எளிய வேடனைப்போல் வளர்ந்து வந்தான். அரண்மனையிலுள்ள எழுடுக்கு மாளிகையும், நிலாமணி முற்றமும், உய்யான வனமும் விதம் விதமான பட்டுடைகளும், பாற்சோறும் பஞ்சணையும் அவனுக்கில்லை. தான் அரசரின் அருமைப் புதல்வன் என்பதையும் அவன் அறியான். இலைக்குடிலில் வாழ்ந்தான்; தினைக்கூழை உண்டான்; புலித்தோலில் படுத்தான்; பகலெல்லாம் கரிய காட்டிலே அலைந்து திரிந்து கொடிய விலங்குகளை வேட்டையாடினான். பல சொல்லியென்ன? அரசன் மகனாய்ப் பிறந்த அவன் புல்லிய வேடன் மகனாகவே தன்னைக் கருதி வாழ்ந்து வந்தான். சோதிட நூற் புலவர்கள் சொன்ன பதினைந்து வருஷமும் கழிந்தது. முடிவில், அவன் தந்தையாகிய அரசன் வந்தான். தன் மகனைக் கண்டு மார்போடு தழுவி முத்தமிட்டு

* (vi) 20.

"மகனே! நீ வேடன் அல்லை; என் சீமந்த புத்திரன். கால வித்தியாசத்தினால் நீ இந்தக் கோல மானாய்; என் கூடவா" என்று அழைத்துச் சென்று, தன் செங்கோலும் முடியும் ஈந்து அரசவாழ்வில் வைத்தான். அப்பொழுது தான் மகனும் "நான் வேடன் அல்லன், அரசன்" என்றறிந்து அரசர் திருவை அனுபவித்து வாழ்ந்தான்.

இதை அடியொற்றித் தான் நமது உலகவாழ்வும் அமைந்துள்ளது. நாமெல்லாம் 'மோக்ஷம்' என்று சொல்லப் படும் பேரின்ப உலகத்துக்கு அரசாகிய சிவபெருமானது பிள்ளைகள். அந்தப் பொல்லாத ஆணவமல மறைப்பால் ஏமாற்ற மடைந்து பஞ்சைகளைப் போலாகிப் பல பிறவிகளிலும் பிறந்து இறந்து வருந்தி வருகிறோம். இன்னும் நமக்கு நல்ல காலம் வரவில்லை. சிவமே நம் அருமைத் தந்தை யென்றறிந்து அவர் பாத தாமரையை வழிபட வில்லை. அப்படி வழிபடுவோ மானால் சிவமும் குருமூர்த்தியாய் எழுந்தருளி வந்து ஆணாயிருந்தால் மகனே! என்றும் பெண்ணாயிருந்தால் மகளே! என்றும் அழைத்து ஆரத்தழுவி உச்சி மோந்து முத்தமிட்டு "நீவருந்தாதே; இனி உனக்குப் பிறவித் துன்பங்கள் இல்லை; என் இன்ப உலகத்துக்குவா; அது உனக்குரியது" என்று இனிதாகக் கூறி நம்மை அழைத்துச் செல்வார்.

இந்நேரந்தான் நமது ஆன்மா அமைதி பெற்றுச் சிவத்தோடு கலந்து இன்பம் அனுபவிக்கிறது; சிவமாகிறது. அந்நேரத்திலும் ஆன்மாவோடு உலகமும், உலகப் பொருள்களும் இருந்தாலும், எப்படி ஆன்மா உடலோடு கூடிய பெத்த காலத்திலே சிவம் தன்னோடு இருந்தாலும் அறிந்து கொள்ள வில்லையோ அது போல அந்த உலகத்தையும் உலகத்திலுள்ள பொருள்களையும் அது அறிவதில்லை. சிவானந்தம் ஒன்று தான் அதற்குப் புலனாகிறது. இதனையே திருமூலநாயனார்.

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்."

என்று அருளிச் செய்வதாயிற்று. அதாவது கைத் திறமையுள்ள ஒரு தச்சன் தன் நுட்ப மதியால் பலநாள்

முயன்று மரத்திலே ஒரு யானை செய்து கொண்டு வந்தான். யானையைப் பார்த்தவர்க ளெல்லாம் இது ஒரு அழகிய யானை. அதன் கொம்பைப் பாருங்கள், செவியைப் பாருங் கள், கண்ணைப் பாருங்கள், வாலைப் பாருங்கள், காலைப் பாருங்கள், உயிருள்ள யானை போலவே யிருக்கிறது'' என்று வியந்து பேசினார்கள். அப்பொழுது அவர்களுக்கு யானைதான் தெரிந்த தல்லாமல் உடன் இருந்த மரம் தெரியவில்லை. பின் சிறிது கழித்து ‘இது என்ன மரத் தால் செய்யப்பட்டது, என்பதை அறியத் தொடங்கினார் கள். ஒருவன், ‘தேக்கு’ என்றான். ஒருவன் இல்லை இது ‘கோங்கு’ என்றான். மற்றொருவன், நீ சொன்னது பிசகு ‘பூவரசு’ என்றான். இன்னொருவன் இது கருங் காலி மரந்தான் என்றான். இப்படி அவர்கள் வாதித்துக் கொண்டிருக்கும் பொழுது, மரந்தான் தெரிந்த தல்லாமல் யானை புலப்படவில்லை. அது போல உலகமும் இறை வனும் எக்காலத்தும் பிரிவின்றிக் கூடி நம்மோடிருந்தா லும் பெத்த காலத்தில் இறைவன் புலனாவதில்லை; முத்தி காலத்தில் உலகம் புலனாவதில்லை என்பதாம். இது தான் ஆன்மவீடு அல்லது ஆன்ம மோக்ஷம் ஆகும். இதனையே ஸ்ரீ மணிவாசகப் பெருமான்

“ அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயம் காத்தென்னை ஆண்டு கொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ ”

என்று அருளிச் செய்தனர்.

ஓம் சாந்தி.

வேதம் நிறைந்த தமிழ் நாடு—உயர்
வீரம் செறிந்த தமிழ் நாடு—நல்ல
காதல் புரியும் அரம்பையர் போலிளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடு (பாரதி)

செவ்வாயில் கால்வாய்கள்

ஸ்ரீமாந் **T. V.** நீலகண்டப்பிள்ளை யவர்கள், B.A., B.L.

நான்கு கோடியே எண்பது லக்ஷம் மைல்களென்றால் நம்மனத்திற்கே எட்டாததொரு தூரம்! இதுவே நாம் வாசம் செய்கின்ற இப்பூமிக்கும் செவ்வாய் (Mars) என்ற கிரகத்திற்கும் இருக்கின்ற சேய்மையின் அளவு. வருடத்தில் ஏனைய நாட்களை விட நவம்பர் மாதம் 17-ம் தேதி யன்று தான் இக்கிரகம் பூமிக்கு மிக அணித்தாகக் காணப்படுவது. அன்றும் இவ்வளவு தூரமாம்! கைந்நொடிப் பொழுதினை ஒரு மைலாக எடுத்துக் கொண்டோமானால் நான்கு கோடியும் எண்பது லக்ஷமுமாகிய தொகையை எண்ணித் தொலைக்க ஒன்றரை வருடத்தினும் மிஞ்சிய காலம் வேண்டும். ஏந்த அண்மையும் சேய்மையும் இதுவே! எண்ணாயிரம் மைல் குறுக்களவுடைய நம் பூமி போன்ற கோளங்கள் ஆறுயிரத்தினை நிரையாய் அடுக்கினும் நம்மால் எட்டக்கூடியதன்று இச்செவ்வாய். முக்கால் மைலுக்கப்பால் இருக்கும் தேங்கா யொன்று நம் நயனங்களுக்கு எவ்வளவாகத் தோன்றுமோ அதனினும் சிறியதாம் செவ்வாயின் அண்மைத் தோற்றம் என்றால் அந்தக் கிரகத்தின் அமைப்பு முதலிய விசேஷங்களை நாம் செவ்வனே அறிதல் கூடுமோ என்று திகைத்தலும் இயற்கையே.

திருஷ்டிக் கருவிகளிருக்கின்றனவே? ஆம், ஆயினும் என்ன! சேய்மைக் கிலக்காம் குன்றிய காட்சியைச் சற்றே தெளியச் செய்யுமே யல்லாமல் அச்சேய்மை தன்னை முற்றிலும் தவிர்க்க வலியவையாமோ இப்பல்வகை சூட்சிகளும்?

வேண்டிய சௌகரியம் அமைந்த காலையும், எட்டங்குல அளவு பார்வை வாயிலை யுடைய (aperture) முற்றிலும் திருப்திகரமான திருஷ்டிக் கருவியால் பார்ப்போமாயின், செவ்வாயாகிய கிரகத்தின் மீது நீண்டு ஒடுங்கி யனவும் சிலந்தி வலையை ஒப்பனவுமாய நேரிய கோடுகளை ஏராளமாய்க் காண்கின்றோம். இக்காட்சியைக் கண்டே சில வருடங்களுக்கு முன்னர் அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தவராகிய லௌவல் (Lowell) என்ற வானசாஸ்திரியும் மேற்கூறிய கோடுக

மகாகனம் பொருந்திய
வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரியார், பி. ஸி.,

உயர்திரு திவான் பஹதூர்
தி. ரங்காச்சாரியார்.



திவான் பஹதூர் ராகவையா, ஸி.எஸ்.ஐ.,
திருவிதாங்கூர் திவான்.

ளின் தோற்றம் இயற்கை யியல்பின் வேறு பட்டிருப்பதே செவ்வாய் கிரகத்தில் மனிதரை யொத்த மிகுந்த பகுத்தறிவினை யுடைய பிராணிக ளிருப்பதற்குத் தடுத்தலரிய சான்றெனக் கூறினர். காணப் படும் இவ் வொடுங்கிய ரேகைகள் செயற்கைப் பயனும் கால்வாய்க ளெனவும் அவைகளி னிரு கரையும் பயிர்ச் செழிப்பு வாய்ந்தன வென்பதும் இவர் தம் கொள்கை.

செவ்வாய் கிரகத்தின் மேற் புறத்துள்ள ஆகர்ஷண சக்தியின் மிகுந்த குறைவும், சூரியனிருக்கும் சேய்மையும் ஆகிய அயிர்த்தல் வேண்டா உண்மைக ளிரண்டினையும் கவனிக்க, இந்தக் கிரகத்தில் ஒவ்வொரு தலத்து மிருக்கும் சீதோஷ்ண நிலை தண்ணீ ருறைதற் குரிய குளிர்ச்சியினும் (Freezing-point) குறைந்த தாய் இருப்பது திண்ணம் என்பது புலப்படும். அவ்வண்ணமாக, ஆங்குள்ள கடல் களும் தடாகங்களும் அடிமுதல் வெளிப்புறம் வரை உறைந்த பனிக்கட்டி யாக வன்றோ இருப்பன? அத்தகைய உலகமும் ஜீவி யத்துக் கேற்ற தோர் இருக்கை யாமோ? முற்றிலும் கொடிய மூடற் பனியால் முழுதுமே பீடிக்கப் பட்ட அவ்வுலகத்தோ நீரோட் டமுடைய பிரமாண்ட மான கால்வாய்களும் காணப்படுவது?

இஃது இவ்வாறாயின், திருஷ்டிக் கருவிக் கெட்டிய "கால்வாய் கள்" உண்மையில் எவ்வியல்பு கொண்டன?

இக்காட்சியின் உண்மை விளக்கம் மிகச் சுலபமாயது. இஃ தோர் காட்சி மயக்கமே யாகும். செவ்வாயின் ஏராளமான சேய் மையே இத் தோற்றத் திற்குக் காரணம். மிகுந்த தூரத்திருக்கும் வளைவுகளும் நேர்மையாகத் தோன்றுவ தியல்பு. நம்மால் காணக் கூடியவையில் முற்றிலும் சிறியது ஒரு நேர் கோடு; நம்மால் காணக் கூடியவையில் மிகச் சிறு பொருளும் நேர் கோடாகவே தோன்றும்.

வீதியின் ஒரு புறம் ஓடும் மின்சாரத் தபால் தந்தியை நாம் யாவரும் கண்டிருக்கிறோம். சாதாரணமான காட்சி வலியுடைய ஒருவற்கு அரை மைல் மட்டும் அதனைக் கண்ணுறல் கூடும் என்பதை மிகப் பலர் அறியார். மேலும் வட்ட வடிவாய கரியதோர் புள்ளியை அதன் குறுக்களவிற்கு 6,000 மடங்கு ஆகிய தூரத்தினிலும் காணுதல் கூடும்; ஆயினும், அதின் உண்மை வலியையும், இயற்கை

யையும், அமைப்பினையும் உற்றறிதல் வேண்டுமாயின் பார்ப்போன் பார்க்கப்படும் பொருளின் குறுக்களவிற்கு 1,700 பங்கைவிட மிகாத சேய்மைக் குள்ளிருக்க வேண்டுவ தவசியம். இதற்கு மிகுந்தும் முற்கூறிய எல்லைக்குள்ளும் இருப்பவர் காணும் தோற்றம் விகார முடையதே. செவ்வாய்த் தோற்றமும் இவ்வகை யானதே.

26 அங்குல அளவு பார்வை வாயிலையுடைய திருஷ்டிக் கருவி யால் பார்க்கவும் ஷியபாரெல்லி (Schiaparelli) என்ற வான சாஸ் திரிக்கும் 12 அங்குல வாயிலையுடைய கருவியால் நோக்கிய லெளவலை (Lowell) ப்போலவே "கால்வாய்களும் தடாகங்களும்" ஏராள மாகத் தோன்றினவாம். ஆயின் 36 அங்குலமுதல் 4 அங்குலம் வரையான பார்வை வாயிலையுடைய திருஷ்டிக் கருவிகளைக் கையாடிய பார்நார்ட் (Bernard), அன்றோணியடி (Antoniadi) என்ற சாஸ்திரி கள் பார்வையின் முன்னர் "கால்வாய்" யாவும் பறந்தே போய்விட, அவை இருந்த விடத்து எண்ணிறந்ததும் பலவகைத்து மாய வளைவு களும் பிறவும் காணப்பட்டன. கடைசியாக, வில்சன் (Mt. Wilson) மலை முனை மீது அமைத்திருக்கும் நக்ஷத்திர சாலையில் இருக்கின்ற 60 அங்குல குறுக்களவுடைய பிரதி விம்பக் கண்ணாடி (Reflector) யினுதவியால் எடுக்கப்பட்ட சாயா படங்கள் (Photos), தங்களுடைய நற்சாட்சியம் உதவவே, அக் "கால்வாய்களை" உண்டுபண்ணினதால் ஒருக்கால் ஒப்பற்ற களைப்பு மிகுதியால் வருந்திய செவ்வாய் கிரகத் திய "மனிதர்கள்" யாவரும் நம் புராணத் தொகுதியில் ஏராள மாய்க் காணப்படுவனவும் நினைத்தற்குரிய வல்லமை யுடையனவு மாய குறளிகள் கூளிகள் தம்மோடு கூடிக் குலாவுவான் சென்றனர் போலும்.

பத்துப்பாட் டாதிமனம் பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையு மிலக்கணமில் கற்பனையே!
வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொரு நீதி!

(மனோன்மணீயம்).

சம்பாபதி

ஸ்ரீமாந் மயிலை சீனி வேங்கடசாமி எழுதியது.

தமிழர், தெலுங்கர், வடுகர், மராடர், மலையாளர், வங்காளர், பாஞ்சாலர், நேப்பாளர் முதலிய பலவகைப் பாஷை பேசும் பல வகைக் குழுவினர் வசிக்கும் இத் தேசத்தை இப்போது இந்தியா என்னும் பெயரால் வழங்குகின்றோம். இவ் இந்திய நாட்டைப் "பரதகண்டம்" என்றும் சொல்லுவார்கள். மிகப் பழைய காலத்தில்—பன்னூற்றாண்டுகளுக்கு முன்—இந் நாட்டின் தென்பகுதியிலிருந்தவர் இந்தியாவை "நாவலந்தீவு" என்னும் பெயரால் வழங்கி வந்தனர். அப் புராதன காலத்தில் தானே வட பகுதியிலிருந்தவர் இந் நாட்டை "ஜம்புத்தீவு" என்று பெயரிட்டழைத்தனர். நாவலந்தீவு என்றாலும் ஜம்புத்தீவு என்றாலும் பொருள் ஒன்றே.

இந்திய மக்களாகிய நம்மை ஈன்றெடுத்த அன்னையாகிய இந்தியத்தாயை-பாரத மாதாவை—இக் காலத்துள்ள நாம் மறந்திருந்தோம். அரசாங்க சம்பந்தமாய் மாறு கொண்டிருப்பதன் காரணமாக அதாவது தேசீய இயக்கத்தின் காரணமாக, இப்போது "இந்தியத்தாய், பாரத மாதா" என்னும் பெயர்களை மாத்திரம் வெறும் வாய் பாடமாகச் சொல்லக் கற்றுக் கொண்டோம்! அத்திருப் பெயர்களையாவது வாயினாற் சொல்லக் கற்றுக்கொண்டது நம் பெரும் புண்ணிய வசமாகும். ஏனென்றால், அத் திருநாமங்களை யுச்சரிப்பதனாலேயே உலகத்தில் உன்னத பதவியை நாம் அடையக் கூடும்; அத் திருப்பெயர்கள் தேசாபிமானத்தையும் வீரத்தையும் நம் உள்ளத்தில் உதிக்கச் செய்கிறதாகையால், நம் அன்னையாகிய இந்தியத் தாயிடம் நாம் ஆர்வத்தோடும் பணிவோடும் அன்போடும் இருக்க வேண்டுமென்பதை முற்றும் மறந்து விட்டோம். அவ் வன்னை நம் மாட்டு எவ்வளவு கருணையுங் கனிவுங் கொண்டிருக்கிறாளென்பதை யறியாமலு மிருந்து விட்டோம்.

இந்திய நாட்டின் உன்னத நிலைமைக்கும் பெருமைக்கும் சிறப்புக்கும் காரணர்களா யிருந்த நம் மூதாதையர், நம் அன்னையாகிய இந்தியத் தாயின் உண்மையான சற்புத்திரர்களாய் அவள் மாட்டு

அன்பும் பணிவு முள்ளவர்களாய் அவ் வன்னேயைக் கண் போல் பாவித்து வழி பட்டு வந்தார்கள். இந்திய மாதாவின் பெருமைக்காக வும் அவள் சிறப்புக்காகவும் தங்கள் இரத்தத்தைச் சிந்தினுர்கள் ; உயிரையுங் கொடுத்தார்கள். ஆகவே, அக் காலத்தில் இந்தியத் தாய் பெருமை யடைந்தாள் ; எல்லா நாடுகளையும் விடச் சிறந்து விளங்கி ஞள். நம் இந்தியத் தாய்க்கு இப்போது ஏதேனும் பெருமையும் சிறப்பும் உள்ள தாமானுல், அப் பெருமையும் சிறப்பும் நம்மால் ஏற்பட்டன வல்ல ; நம் மூதாதையர்களால் ஏற்பட்டன வென்றே உறுதியாகச் சொல்லலாம்.

இந்தியத் தாய் என்றும் பாரத மாதா என்றும் இக் காலத்து நாம் வழங்குகிற அன்னேயை, நம் மூதாதையர் " சம்பா பதி " என்னும் அழகிய திருப்பெய ரிட்டு அழைத்தனர். நம் அன்னே மாட்டு நம் மூதாதையர் கொண்டிருந்த ஆர்வத்தின் மிகுதியை என் என்போம் ! அவர்கள் " சூச்சரக்குடிகை " என்னும் பெய ரமைந்த ஒரு சிறந்த ஆலய மமைத்து, அவ்வழகிய ஆலயத்தில் சம்பா பதியின் (இந்தியத் தாயின்) திரு வுருவை அமைத்துப் பூசித்துப் போற்றினுர்கள். ஒவ் வொரு நாளும் சிறுவர் சிறுமியர், ஆண் மக்கள் பெண் மக்கள் முதலிய அனைவரும் சம்பா பதியின் ஆலயம் சென்று அவ்வன்னேயைப் புதிய மலர்களால் பூசித்து வந்தார்கள். இது, நம் நாடு உன்னத நிலையி லிருந்த காலே நடந்தவை யாகும்.

சம்பா பதி, இச்சம்புத் தீவுக்கு (இந்தியாவுக்கு)காவல் தெய்வமாக விளங்கினுள் ; விளங்குகிருள். இந்தியா தேசத்திலுள்ள " துறையு மன்றமுந் தொல்வலிமரனும், உறையுளுங் கோட்டமும்..........." ஆகிய எல்லா இடங்களேயும் பொருளேயும் காப்பவளாகிய அவ்வன்னே, தன் மணி வயிற்றில் தோன்றிய இந்திய மக்களின் துன்பத்தைப் போக்குவதே கண்ணுங் கருத்துமாக உள்ளவள். நம் சீர்மையையும் நன்மையையுங் கண்டு களிப்பவள் ; நம் சிறுமையையும் துன்பத்தை யுங் கண்டு மனம் வருந்தி நாம் நன்மை பெற வேண்டி நற்றவம் புரிப வள். " நாவ லோங்கிய மாபெருந் தீவினுட், காவற்றெய்வம் " என்று மணிமேகலேயிற் சிறப்பித்துச் சொல்லப் படும் இவ்வன்னே, முன் ஒருகாலத்து இந்திய நாட்டின் பகைவர்களாகிய அரக்கர்களால் நேரிட்ட துன்பங்களேக் கண்டு வருந்திக் கண்ணீர் உகுத்து, தன்

மக்கள் அரக்கர் துயரம் நீங்கி இன்ப வாழ்வடையும் படி நாவல் மரத்தின் கீழிருந்து அருந்தவம் புரிந்து அத்துன்பத்தை நீக்கினுள். இதை,

“ இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்கொளிமேனி விரிசடையாட்டி
பொன்றிகழ் நெடுவரையுச்சித் தோன்றித்
தென்றிசைப் பெயர்ந்தவித் தீவகத் தெய்வதஞ்
சாகைச் சம்பு தன் கீழ்நின்று
மாநில மடந்தைக்கு வருந்துயர்கேட்டு
வெந்திற லரக்கர்க்கு வெம்பகை நோற்ற
சம்பு வென்பாள் சம்பா பதியினள் ”

என்னும் அடிகளால் உணரலாம். சம்பா பதி என்னுந் திருப் பெயருடைய இவ்வன்னை, என்றும் குமரி யாகவே விளங்கு கின்றுள் என்றும் நற்றவத்திற் சிறந்த இவ்வன்னையின் திருமேனியும் சடையும் பொன் ஒளி போல் பொலிகின்றன வென்றும் பண்டைப் பனுவல்கள் பகர்கின்றன.

இந்தியத் தாயாகிய இவ்வன்னை, இப்போது நாமிருக்கும் நிலைமையைக்கண்டு பரிதபித்து மனம் வாடுகின்றுள். ஏனென்றுல், அவ் வன்னையின் மணி வயிற்றில் தோன்றிய நாம் நம்முளொருவர்க்கொருவர் ஒற்றுமையின்றி சாதி வித்தியாசம் சமய வித்தியாசங்களையே பெரிதெனக் கொண்டு ஒருவருக் கொருவர் அன்பின்றி வாழாமல் வாழ்கின்றேம்.

அயல்நாட்டினின்று வந்தவரை நன்கு மதிப்போம். அவரைத் தீண்டுவோம். அவரைச் சம மாகப் பாவிப்போம் ; அவரோடு உண்போம்; ஆனுல், நம்மோ டுடன் பிறந்தவரைத் தீண்டோம்; அவரோடு உறவாடோம் ; அவர் நம்மின் தாழ்ந்தவர், அவரை ஒருபோதும் நன்கு மதியோம் என்னும் அநாகரிகத்தை மேற் கொண்டோம். சமவாய வாழ்க்கைக்கு இன்றியமையாத நன்மைகளை யெல்லாம் கைவிட்டோம் ; தீமைகளை யெல்லாம் ஒன்று விடாமல் கைக் கொண்டோம் ; துயர வாழ்வை மேற்கொண்டோம், சிறந்தவாழ்வைத் துறந்தோம்.

அன்பை மறந்தோம், ஒற்றுமையைக் குலைத்தோம். வீரத்தை மறந்தோம், சுதந்திரத்தை இழந்தோம். இவற்றேடமையாது, ஒப்

பற்ற செல்வமாகிய பாரத மாதாவாகிய சம்பா பதியின் திருவடி தொழுவதையே மறந்து விட்டோம்.

ஆனால், நந்தாய் நம்மை மறந்தா ளில்லை. பாரத மாதா என்றும் இந்தியத் தாய் என்றும் சம்பா பதி என்றும் சொல்லப் படுகின்ற நம் அன்னை, முன்னொரு காலத்து அரக்கரால் நேரிட்ட துயரம் நீங்க அருந்தவம் புரிந்தது போலவே இன்றும் நம் துயரம் நீங்க நற்றவம் புரிந்து வருகின்றாள். அவள் புரியும் நற்றவத்தின் அறிகுறி யாகவே இப்போது சில உத்தம புருஷர்கள் தோன்றி பல நற்செயல் புரிந்து வருகிறார்கள் என்பது தவறாகாது. சம்பா பதி என்னுந் திருப் பெயருடைய நம் இந்தியத் தாய், எல்லா உலகங்களையும் அண்டங் களையும் இயக்கும் அருட்சத்தியின் கூறு யிருப்பவள் என்பது சொல் லவும் வேண்டுமோ? எனவே, அவ்வன்னையின் மக்களாகிய இந்தி யர் அருட்சத்தியின் வன்மை யமையப் பெற்றவர் என்பது அங்கை நெல்லிக் கனி யன்றோ?

நாம் ஒவ்வொரு நாளும் உண்மை யன்போடு இந்தியத் தாயை (சம்பா பதியை)ப் போற்றிப் பணிந்து வருவோ மாயின், எல்லாச் செல்வங்களோடும் சிறந்த சுதந்தர வாழ்வும் பெறுவோம் என்பதில் ஐயமுண்டோ? தாயை நேசித்து அன்பு பாராட்டாத பிள்ளை இருந்தென்ன? இறந்தென்ன? தாய் நாட்டை அன்புடன் நேசிக் காத மக்கள் வாழ்ந்தா லென்ன? அழிந்தா லென்ன? இந்தியத் தாயின் மக்களாகிய ஒவ்வொருவரும், தாம் பிறந்த தாய் நாட்டுக்கு, பெருமை யையோ மேன்மை யையோ உண்டு பண்ணும் காரியத்தைச் செய்த பின்னரே தங்கள் உயிரை விடுவது உத்தம மாகும். அதுவே அழியாப் புகழும் இன்பமு மாகும். அதுவே பாரத மாதாவின் மன துக்கு இன்பந் தருவது மாகும்.

நம் உயர்வும் தாழ்வும் நம்மிடத்திலேயே இருக்கின்றன. நமக் குள் வீரம் இருந்தால் நாம் உயர் வடைவோம். கோழைகளாக விருந் தால் தாழ்வும் சிறுமையும் வறுமையும் இழிவும் அடைவோம். சுய ஆட்சி விரும்புவோன் அதாவது சுதந்தரப் போர்வீரன் வீரனாகவே விளங்கவேண்டும். அவனிடத்தில் அடிமைத் தனமும் கோழைத் தனமும் இருக்கக்கூடாது.

நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானும்,—நிலையினு
மேன்மேலுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்.

இவ்வெண்பாவின் கருத்தை ஒவ்வொருவரும் கடைப்பிடித் தொழுகு வோமாக.

திருமடந்தை சீர் பரவல்

(பரிசில் துறை தழுவிய பாணிப்பாட்டு)

ஸ்ரீலஸ்ரீ பிரபோத சைதந்யர்

(பண்டித மயில் வாகனனார் B. Sc.)

எழுதியது

விண்நின்ற சோதி விரிகதிர் மண்டிலத்தின்
உள்நின்ற தெய்வ உருவமே !—கண்ணின்
ஒளியே ! ஒளிக்கொளியே ! ஒள்பதுமம் மேவும்
அளியே ! அளிக்குமுதல் ஆயன் களிகூரும்
பெண்ணரசி யே ! நினது பேரெழிலின் தோற்றத்தை
எண்ணி உரைக்க இயைந்துநின்ற—விண்ணவர்கோன்
எல்லையற்ற ஓர்பொருளுக்(கு) எல்லை இடல் யாங்ஙனமென்(று)
அல்லல் உற்ருன் என்னும் அறிஞர் உரை—மெல்லச்
செவி அகத்துச் சேர்தலும்யான் சிந்தைநைந்தேன் அன்னாய் !
கவி அகத்துத் தேர்ந்த கலைஞர்—புவி அகத்துப்
பைந்தொடி மெல்லி நல்லார் பாணி உரைக்குங்கால்
செந்திருநீர் ஆரென்னச் செப்புவார்—அந்தரமாம்
தாக்கணங்கே ! நின்திருவைச் சாற்றுவ(து) என்றால்
அடியேன்
ஆக்கம் அரிப்பிரியை ஆயஅம்மை—நோக்கில்
தனக்(கு) உவமை தான் என்பேன் தாயே ! சிறியேன்
மனக்கமல பீடம் வதிந்து—நினைக்கரிய
பேர் எழிலைக் காட்டுவையேல் பேணுர் அறிவிற்கெட்டும்
சீர்சொலல் என் நாவின் செயல் ;

வான்அகத்தும் மண்அகத்தும் வயங்குசுடர் நீ ஆயின்
கான் அகத்தும் பொழில் அகத்தும் கருதும்எழில் நீ ஆயின்
நான் அகத்துக் கொண்டன நின் நளினமலர்ப் பதம் ஆயின்
தேன் அகத்த வனசம் ஒன்றே திருப்பீடம் ஆவதுவே !

கோபாலன் திருமார்பில் குலவும்ஒளி நீ ஆயின்
பூபாலர் தடம்தோளில் பொலிவனப்பு நீ ஆயின்
நாஆர வழுத்துவநின் நளினமலர்ப் பதம் ஆயின்
பூ ஆரும் பதுமம் ஒன்றே புதுப்பீடம் ஆவதுவே!
பொன்நீர்நெல்அணிமணிசீர் புகழ்இளமை நீ ஆயின்

லக்ஷ்மி

மின்நேர இடைமடவார் வியன் எழிலும் நீ ஆயின்
நல்நேரர் உளத்தனநின் நளினமலர்ப் பதம் ஆயின்
செம்நேர்மைக் கமலம்ஒன்றே திருப்பீடம் ஆவதுவே!
என ஆங்கு
மன்றல்அம்தார் குழல்அமுதை மாக்கடலில் பிறந்தாளைக்
கன்றெறிந்த இறைமகிழும் கனம்குழையைப் பணிந்து
நின்றேன்

நின்ற எல்லையுள் நீ(டு) அருள் சுரந்(து) என்
மனக்கண் காண வலக்கண் துடிப்ப
உளம் எனும் பீடத்(து) உவந்து தோற்றினள்
வளர் இள மதிமகள் வயங்(கு) ஒளி மலர்மகள்;
ஆங்கு
பொன்திறம்கொள் திருமேனி பொலி(வு) உறுநல் எழில்
கண்டேன்

குன்(று) அனைய பயோதரத்தில் குளிர்முத்த வடம் கண்டேன்
அன்(று) அலர்ந்த செங்கமலம் அங்கைமலர் மிசைக்கண்டேன்
வெண்நிறத்த சுரிசங்கம் விளங்குதிருக் கரம்கண்டேன்
அண்ணல்அம்சீர்த் தனிஆழி அமர்ந்தவிறல் கரம் கண்டேன்
புண்ணியச்செம் கருடன்மிசைப் பொருந்துதிரு உருக்கண்டேன்
மண்அகம் விண்அகம் போற்றும் வைணவியைக் கண்டேனே;
கண்டுளம் களிகூர்ந்(து) அண்டரும் அவுணரும்
பாற்கடல் கடைந்த காலத்(து) ஆர்த்(து) எழு
நஞ்சொடும் அமுதொடும் நனி இளம் பனிமதிப்
பிள்ளைப் பிறையொடும் ஒள்ஒளி வெள்ளைப்
பரியொடும் அரம்பையர் பலரொடும் தோற்றிய
கிள்ளை மென்மொழி கிளர்ஒளி அணங்கே!
வேண்டுவார் வேண்டும் வரம் அருள் திருவே!
காண்டற்(கு) அரிய கனக வல்லி!
போக மோக்ஷம் பொருந்துவிப் பவளே!
யோகசா தனையால் உளத்(து) உதிப் பவளே!
ஆதி ஈ(று) இல்லா ஆநந்த நிறைவே!
தூலசூக் குமத்துத் தோன்றிநின் றவளே!
மால்அளிப் பவளே! மயக்கறுப் பவளே!
ஞாலம் ஏ(ழு) உண்ட நாதன்பால் நிறை
வேலையில் துயில விழைவொடு அவன்செய்

திருமடந்தை சீர் பரவல்

வேலையைப் புரியும் விமல வல்லி !
யான்அறி அளவையில் தமிழ்புனைந்(து) ஏத்தினன்.
கான் அமர் புரிகுழல் கமலை ! நின் திரு அடி
வாழ்கென ஏத்தி வணங்கி நின்றனனால் ;
அவ்வரை

ஆழியான் உளம் கவரும் அணங்கும்அருள்வளம்சுரந்து
காழியார் இளங்கோவின் கவிமருவு தமிழ் வாழ்க !
ஊழிதோ(று) ஊழிதோ(று) உலவுகநல் தமிழ்நாடு !
வாழிய ! செம் தமிழ் அறிஞர் வாழிய ! என்(று) எனைநோக்கி
செம்மொழிநல் தமிழ்ப்புலவ ! செவ்வியுற நீ உரைத்த
செம்மொழிநல் தமிழ்ப்பனுவல் செய்யுள்விலைசெப்(பு)என்றாள் ;
அம்மொழி என் செவிப்படலும் அகம்குழைந்து முகம் மலர்
வுற்(று)
அம்மொழி என் செவிப்படுத்த அன்னைஅடி பணிந்(து) உரைப்
பேன்

வாழி ! நாரணன் சிரம் கொள் மெல்அடி
வனச வல்லியே ! அவ்வை பாடலைக்
கூழ் அளித்(து) உறவாடி நின்ற ஓர்
குறவர் மாமகள் எளிது கொண்டனள்.
முதிர மால்வரைத் தலைவன் ஆகிய
முடிவில் சீர்ப்புகழ் குமண மன்னவன்
சதுர் அழிந்தபின் புலவன் வந்துறத்
தலை விலைக்(கு) ஒரு பனுவல் கொண்டனன்.
அதியன் அஞ்சி பல் ஆண்டு வாழ்வினை
அதிகம் என்(று) எண்ணன், அரிய தெய்விகக்
கரிய நெல்லியின் கனியை ஔவைசெங்
கைக்கொடுத்(து) ஒரு கவிதை கொண்டனன்.
பனியின் மால்வரை எல்லை யா தன் முப்
பத்தொ(டு) எட்(டு) யாண்(டு) இறையும் ஊர்களும்
உன(து) எனக் கொடுத்(து) உம்பல்சேர்குமட்
டூரர் செந்தமிழ்ப் பாடல் கொண்டனன்.
எண் ஐந்(து) ஒன்று நூ(று) ஆயிரம் பொனும்
ஏற்ற பாகமும் போற்றி நல்கியே
கண்ணி நார்முடிச் சேரல் காப்பியூர்க்
காப்பியன் தரும் கவிதை கொண்டனன்.

லக்ஷ்மி

தோட்(டு) இதழ்த்தொடைச் சேரர் கோமகன்
சோர்வில் மைந்தனை ஊரை நல்கியே
பாட்(டு) இசைத் தொடைப்பயன் அளித்தசீர்ப்
பரணர் பாடிய பனுவல் கொண்டனன்.
மத்த யானையான் வளவர் கோமகன்
மன்னு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ(டு) ஆறு நூ(று) ஆயிரம் பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டனன்.

இனனனம் முன்னாள் நடந்த இயல்புசில எடுத்(து) உரைத்
தேனை
கன்னி இளம் தமிழ்க்கவி எம் கண்ணுதலைக் கார் இருளில்
பொன் அனையார் பால்தூதாய்ப் போக்கும் எனில் விலையும்
உண்டோ?
பின்உரைக்கில் கொள்வோர்தம் பெருமதி எம் கவிமதிப்பே.
கூழ் உடையார் கூழ் அளிப்பார், கோமக்கள் பொன் அளிப்பார்,
ஆழிமணி முடிவேந்தர் அகல்நிலத்தை எமக்(கு) அளிப்பார்
கீழ்மக்கள் வசைஅளிப்பார், கேள்வியிலார் நகை அளிப்பார்,
வாழ்(வு) அளிப்பார், மாமுனிவர் மறைமுதல்வன் வீடளிப்பான்.
நீ அளிப்ப(து) எது அம்மா! நித்திலமும் பொற்குவையும்
சேஒளிசேர் மலர்ப்பதத்தின் சிறுதூழி ஆகாவே!
வாசவனும் வடதிசையின் மரகதனும் பெருநிதியம்
தேசுசெறி கால்விரல்சேர் சிறுபீலிக்(கு) இணை ஆமோ?
கங்கைநீர்க் கரை அடைந்தோர் கங்கையாள் தனைநோக்கி
அங்கை நீர்க்(கு) இரந்து நிற்றல் அறிவின்பால் படுவதோ?
சங்குசேர் திருக்கரத்தோய்! தமியனேன் இதயம் எனும்
பங்கயத்துள் நீ உறையில் பாரில்ஒரு குறையும் உண்டோ?
எனவழுத்தி இறைஞ்சி நின்றேன்; இகபரத்து வரும் பொருளைத்
தினைபொறுத்த துணைமதியாச் சிவானந்த அருட்குரவன்
புனித அடித்தொண்(டு) எனுமெய்ப் பொருள் படைத்த
பெருமையினேன்.
வனசமலர்ச் செழும்திருவும் வனப்(பு) இளமை வளம் விளங்க
அணி நிறை மதிமுகத்(து) அருள்நகை ஒளிர்தா
மணிமருள் செவ்வாய் மலர்இதழ் விரித்துத்
தமிழ்வளம் பொலிக! தமிழ்நாடு வாழ்க!
அமிழ்தன தமிழ்புனை அறிஞநீ வாழ்க!
பனுவல் கேட்(டு) உவந்தனன், பரிசில் கொள்மதி!
வாழ்கென ஒருவரை வாழ்த்துவை ஆயின்
வாழும் அன்னார்க்கு மலிவளம் அளிப்பேன்.
வீழ்கென ஒருவரை விளம்புவை ஆயின்
வீழும் அன்னார்பால் மேவேன் யான் எனப்
பரிபுர மலர்ப்பதம் காட்டித்
திருவின் செல்வியும் அருள் வழங்கினனே.

குறைவற்ற செல்வம்

ஸ்ரீமான் பி. ஸ்ரீ ஆச்சாரியா அவர்கள் எழுதியது

உடம்பை இயற்கை நிலையில் பேணி வளர்க்க வேண்டும், உடம்பிற்குச் சுகம் வேண்டும், திண்மை வேண்டும், ஒளி வேண்டும், அழகு வேண்டும்.

***

சாதனங்களால் உடம்பையும் உள்ளத்தையும் வசமாக்கி மலர்த்தி, நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமு மாக மேலோங்கி வளர்வோன் சரீரயோகி.

***

உடம்பு ஆன்மாவின் ஆடை—பரமாத்மாவின் கோயில் ஆதலால் உடம்பைப் போற்றி வளர்க்க வேண்டும் என்று சரீரயோக நூல் வற்புறுத்து கின்றது.

***

திடசரீரம் ஆன்ம பரிணமத்திற்கு ஏற்ற கருவியாகும். அந்தரி யாமியாய் எங்கும் நிறைந்து விளங்கும் இறைவன் நமது சரீரத்திலும் மறைந்து நின்று நமக்கு ஆயுளையும் ஆரோக்கி யத்தையும் வீரியத்தை யும் அளித்துக் காக்கின்றான் என்பது யோகியரது திடநம்பிக்கை.

***

நமக்கு அழகிய திவ்வியமான உடம்பை ஆன்ம வளர்ச்சியின் பொருட்டுத் தனது அழகிய நல் அருளுக்குச் சான்றாக அளித்தி ருக்கும் மகா சக்தியே எத்தகைய பிணி கவலையாதிய வற்றையும் அறவே ஒழித்து நீண்ட ஆயுளையும் நோயற்ற வாழ்க்கை யையும் நமக்கு அருளி நம்மை அல்லும் பகலும் அனவரதமும் காக்க வல்லது. அண்டத்திலே பரிபூரணானந்த மாய்ப் பரந்து ஒளிரும் ஸர்வ சக்தியே, பிண்டமாகிய உடம்பிலும் பரிபூரண சுகமாகத் தன்னை வெளியிடுகின்றது. இத்தகைய நம்பிக்கை உண்மையான ஆரோக் கியத்திற்கு 'அஸ்திவார' மாகும்.

***

ஊனிலும் உயிரிலும் உணர்விலும் கலந்து நமக்கு இன்பத்தை யும் வீரியத்தையும் ஆரோக்கியத்தையும் அருளும் 'ஸர்வ-சக்தி'

யின் அம்சங்களாகவே, பிரகிருதி சக்தியும், பிராணசக்தியும், பிறசக்திகளும் கருதப்பட வேண்டும்.

***

இயற்கை நிலையில் உடம்பை ஆரோக்கிய மாக வைத்திருப்பதும், சரீர இயந்திரத்தைத் திறமையாக இயக்கிப் பழுது பார்த்துப் பாதுகாப்பதும், காயங்களை ஆற்றி ஒடிந்த எலும்புத் துண்டுகளை ஒன்றாய் இணைப்பதும், ஸர்வாந்தரியாமி யாகிய சர்வ சக்தியேயாகும்.

***

நமது அறியாமையாற் இயற்கைப் பிரமாணங்களை மீறுகிறோம். நமது தவறுதல்களை நீக்கி அழுகிய அல்லது கெட்ட பொருள்களை உடம்பினின்றும் வெளிப்படுத்தும் பொருட்டு நமது உடம்பிலுள்ள ஜீவசக்திகள் அன்போடு தொழில் செய்கின்றன. இதனை நோய் என்று கூறுகிறோம். நோய்=துன்பம். நோய் துன்பமாகக் காணப்படினும் அது நமக்கு இடித்து அறிவுறுத்தும் அன்புமாகும். நோயின் காரணங்களை யுணர்ந்து ஒழுகுவோ மாயின்,—ஆரோக்கிய லட்சுமியின் நல் அருளை நம்புவோ மாயின்—ஆன்மாவின் பொன் குடையாக இவ்வுடம்பை நமக்கு அருளிய ஸர்வ சக்தியை ஊனிலும் உயிரிலும் உணர்விலும் நின்று தன் கடமையை நன்குணர்ந்து என்றும் நமக்குப் பூரண ஆரோக்கியத்தைக் கொடுத்துக் காத்து வருகின்றது என்று கருதி வாழ்வோ மாயின்—நாம் நோயற்ற வாழ்வு வாழ்வோம்.

***

இயற்கை வாழ்க்கையே நோயற்ற வாழ்க்கை. செயற்கை வாழ்க்கை ஆரோக்கிய வாழ்க்கை யன்று. நமது நடை யுடை பாவனைகளும் வழக்க ஒழுக்கங்களும் கூடுமான வரையிலும் இயற்கையைத் தழுவியே இருக்க வேண்டும். இவற்றை யெல்லாம் "இயற்கை" உரைகல்லைக் கொண்டு சோதித்துச் சீர்திருத்த வேண்டும்.

***

"உள்ளத்திலும் உடம்பின் ஒவ்வோர் அணுவிலும் அந்தரியாமியாய் ஒளிரும் 'ஸர்வ—சக்தி' தன் தொழிலைக் குறைவறச் செய்யும். இம் மகா சக்தியை நம்புகிறேன். இச்சக்தியை நம்பித் தொழில் செய்ய விடுகிறேன்—தொழில் செய்ய விட்டு விட்டேன்! இம்மஹா சக்தி எல்லா நலன்களையும் அருளக் காத்துக் கொண்டிருக்கின்றது."

இம் மந்திரத்தின் பொருளைச் சிந்தித்துத் தெளிந்து இயற்கை வாழ்வுக்குத் திரும்பவேண்டும்.

***

கவலை என்ற சுமையை இதயத்தினின்றும் தள்ளிவிடு. நம்பிக்கையாகிய உழவைச் செய்து நல் விருப்பம் என்னும் விதையை உள்மனத்தில் விதைத்தால், ஆரோக்கிய ஸ்ரீயின் நல் அருள் தானே விளையும்.

***

உடம்பு தக்க சாதன முயற்சிகளால் வளர்க்கப்பட வேண்டும்; நன்கு போஷிக்கப்பட வேண்டும். உடம்பைப் போஷித்து வளர்க்கும்போதே 'இது ஆன்மாவின் விருப்பத்திற்கு இணங்கித் தொழில் புரிய வேண்டிய இயந்திரம்' என்ற நல் உணர்ச்சியை உள் மனத்தில் வளர்க்க வேண்டும். இத்தகைய உபாயங்களால் யோகி திண்மை வாய்ந்த உடம்பிற்கு எஜமானனாக விளங்குகின்றான்.

***

இவ் உலகில் நற்பணி செய்யும் பொருட்டு இவ் உடம்பு நமக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய லட்சியத்தோடு உடம்பைச் சாதனங்களில் பழக்க வேண்டும். தேகப் பயிற்சிக்கு உரிய சாதனங்களில் யோகி உள்ளத்தை ஒரு முனையாகச் செலுத்தி, உள்ளத்தையும் உடம்பையும் ஒருங்கே வளர்த்து இவற்றின் மீது தனது 'ஆன்ம—சுய—ஆட்சியை' இனிது செலுத்துகின்றான்.

***

ஒருமையான உள்ளத்தோடும் தகுந்த தியான மந்திரத்தோடும் தேக முயற்சி செய்யும் யோகிக்குச் சரீரத்தின் ஒவ்வொரு பாகமும் ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வோர் அணுவும் கீழ்ப்படிந்து தொழில் செய்யும். இத்தகைய தேகப் பயிற்சியால், இச்சா நரம்புகளும் தசைகளும் மாத்திரம் அல்ல—அநிச்சா நரம்புகளும் தசைகளும் (Involuntary Nerves and Muscles) கூட, யோகியின் ஆணைக்குக் கீழ்ப்படுகின்றன. இதுவே சரீர யோகியின் 'சுய ஆட்சி' யாகும்.

***

வல்லார் மனோ பாவத்தை வெளியிடும் குழல் போலவும், சித்திரம் போலவும், கவிபோலவும், சாதனங்களால் வளரும் சரீரமும் எஜமானனாகிய ஆன்மாவின் களங்கமற்ற உள்ள நிலையை இனிது பிரதி பலிக்கின்றது.

———

கதர்ப்பாட்டு

சுத்த சுதேசியக் கத்தர்த் துணியினைச்
சோதரரே நீர் கொள்வீர்—இனி
மற்றவெல்லாந்தள்ளி நாட்டுத் துணியினை
மாண்புடனே நீர் கொள்வீர். (சுத்த)

நாட்டில் விளைந்த நம் பஞ்சினைக்கொண்டு நம்
நாட்டினில் செய்த துணி
வீட்டினில் மாதர்கள் ராட்டினில் நூற்ற
மேன்மை சேர் நூலைக்கொண்டு
நாட்டுத் தறியில் நம் நாட்டவர் செய்த
நயமான கத்தர்த் துணி
பாட்டினிற் பாடியே வேண்டுகின்றோம் நீர்
பண்புடன் வாங்குவீரே. 1

நன்மை தருந்துணி! தின்மை யறுந்துணி!
நாட்டினில் செய்த துணி!
வன்மை தருந்துணி! வாழ்வு தருந்துணி!
மாண்புடைக் கத்தர்த் துணி!
கன்ம மறுந்துணி! தன்மம் வளர்துணி!
காந்திசொல் மேன்மைத் துணி!
இன்ன லறுந்துணி! இன்பந் தருந்துணி!
இந்திய நாட்டுத் துணி! 2

பஞ்சம் அழிந்திடும் நோய்கள் ஒழிந்திடும்
பாவம் அழிந்திடுமே
சஞ்சலம் நீங்கிடும் தாழ்வுகள் நீங்கிடும்
தாசத் தனம் நீங்கும்
கஞ்சி யில்லாமல் வருந்திடும் ஏழைகள்
கஷ்டங்கள் நீங்கி விடும்
மிஞ்சிய சுத்தத் துணியிஃ தென்றும்
விருப்புடன் கொள்வீரே. 3

நெ.

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சரித்திரச் சுருக்கம்

216-ம் பக்கம் தொடர்ச்சி.

(ஸ்ரீமான் வ. சு. செங்கல்வாராய பிள்ளை, எம். ஏ.)

பின்னும் அநேக தங்காபதம், வன்பாத்தான் பனங்காட்டூர், திருமாற்பேறு, திருவல்லம் ஆதிய தலங்களைப் பணிந்து திருக்காளத்தி வந்து சேர்ந்தனர். அங்கிருந்தபடியே ஸ்ரீ சைலம், திருக்கேதாரம் முதலிய வட நாட்டுத் தலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடினர். திருக்காளத்தியி னீங்கி பூலோக சிவலோகம் போலப் பொலியும் திருவொற்றியூர் வந்துசேர்ந்து திருக்கோயிலை வலங்கொண்டு ஊனும் உயிருங் கரைந்துருகப்

“பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டுங் கலமுந் திமிலுங் கரைக்கே
யோட்டுந் திரைவா யொற்றி யூரே.”

எனவரும் (91-ஆவது) திருப்பதிகத்தைப் பாடி அத்தலத்திலேயே அமர்ந்து நித்தம் இறைவனை வணங்கி வந்தனர். நிற்க

சங்கிலியாருடன் திருமணம்.

உமாதேவியாரின் ஆணையின்படி கயிலையி னீங்கிய அநிந்திதையார் ஞாயிறு என்னும் ஊரில் ஞாயிறு கிழவர் என்பாரது மகளாகப் பிறந்து சங்கிலியார் என்னுந் திருநாமத்துடன் வளர்ந்தனர். அவருக்குத் திருமணஞ் செய்ய வேண்டி அவரது தந்தையார் ஏற்பாடு செய்யுஞ் சமயத்து “இறைவன் எமக்கென ஏற்படுத்திய ஒருவருக்கே யான் உரியேன். இனிச் சிவனருளையே நாடி யான் திருவொற்றியூர் செல்வேன்” என்றனர். அச்சமயத்து இவரை மணம் பேச முயன்ற ஒருவன் ஏதமுற, யாருஞ் சங்கிலியார் என்றால் அச்சமுற்று ஒதுங்கினர். சங்கிலியாரும் ஈசர் திறத்துப் பேச்சன்றி வேறு அறியார். இதைக் கண்ட அவரது பெற்றோரும் அவர் சொல்லுக்கு மாறாக நடக்க அஞ்சித் திருவொற்றியூரிற் கன்னிமாடத்துத் தங்கித் தவம்புரிவா

யாக எனக்கூறி அவரை விடுத்தனர். சங்கிலியாருங் காலையு மாலையும் பூமாலை கட்டிக்கொடுக்கும் அருமைச் சிவ தொண்டு செய்து நித்தஞ் சிவதரிசனஞ்செய்து அத்தலத்தில் அமர்ந் தனர். ஒருநாள் திருக்கோயிலிற் செய்யப்படுந் திருத் தொண்டுகளை பார்த்துக்கொண்டுவந்த ஆரூரர் புஷ்ப மண் டபத்தை அணுகிய போது இறைவர்க்குப் பூமாலையை யளித்து அவரைத் தரிசித்து மின்போலச் சங்கிலியார் மறைவதைக் கண்டனர். விதிப்பயனின் வேகத்தாற் கண்ட துங் காதல் கொண்டனர். யாரோ என் உள்ளத்தைத் திரி வித்த இம்மாது என்றனர். அருகிலுள்ளார் "இவர் தாம் நங்கை சங்கிலியார். ஈசன் பணிசெய்யுங் கன்னியார்" என் றனர். ஆரூராரும் "இப்பிறவியை இருவரால் எய்தினேன். ஒருத்தி பரவை; இவளே மற்றையவள்" என நினைந்து, நன்று! இதுவும் இறைவன் திருக்கூத்தே "அவரைக் கொண்டே இவளைப் பெறுவேன்" எனத் திடங்கொண்டு அவர் முன்னிலையிற் சென்று "ஐயா இடப்பாகத் தொருத்தி போதாதென்று முடியிலும் ஒருத்தியை ஒளித்து வைத்துள் ளீர்! அடியேன் மீது திருவருள் வைத்து நமக்குத் திரு மாலை தொடுக்கும் திருப்பணி பூண்டுள்ள சங்கிலியைத் தந்து என் வருத்தத்தைத் தீர்த்தருளும்" எனப் பன் முறை வேண்டினர். அதே நினைவாக மனம் வாடும் அன்ப ரிடம் அன்றிரவே சிவபிரான் போந்து "அருமைச் சங்கி லியை உனக்குத் தருகின்றோம். கவலை ஒழிக" என்றார். வன்றொண்டரும் "என் உயிரைக் காத்தருளினீர்" என்று பெரு மகிழ்ச்சியுடன் போற்றி இறைவன் திருவடியிற் பணிந்தார். இறைவனும் அங்கு நீங்கிச் சங்கிலியாருடைய கனவில் வேதியர் உருக்கொண்டு தோன்றச் சங்கிலியாரும் அவரது திருவடியில் விழுந்து "அடியேன் உய்யத் தாங்கள் எழுந்தருளிய அன்புக்கு யான் என்ன செய்ய வல்லேன்" என, நீற்றுக்கோல வேதியரும் "சங்கிலி! கேள்! என் பால் மிக்க அன்புடையவன்; மேருமலையினும் மிக்க தவ ராஜராஜன்; வெண்ணை நல்லூரில் எம்மால் உலகறிய அடி மையாகக் கொள்ளப்பட்டவன். உன்னைத் தன் பொருட்டு அவன் என்னை இரந்தான். நீ அவனை விருப்பொடு திரு மணஞ் செய்வாயாக" என்றனர். அதைக் கேட்ட சங் கிலியார் "எம்பிரானே! நீங்கள் யாருக் கென் றருளிச்

செய்தீர்களோ அவருக்கே யான் உரியேன். நீங்கள் அருளியதைத் தலைமேற் கொண்டேன். யான் அந்நம்பியாரூரரை மணக்கும் விஷயத்திற் சொல்ல வேண்டிய செய்தி ஒன்றுளது. அஃதாவது அவருக்குத் திருவாரூர் வாழ்க்கையே பெரிதும் இச்சையென்பது சுவாமிக்குத் தெரியுமே! அதற்கென் செய்வது"— என மிக்க நாணத்துடன் குறிப்பாகக் கூறினர். அதற்குச் சுவாமி "உன்னைவிட்டுப் போகாமைக்கு ஒரு சபதம் ஆரூரன் செய்வான்" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்து அங்கிருந்து வன்றொண்டரிடம் வந்து "நீ அவளை மணக்க வேண்டின் இன்றிரவே அவள் முன்பு 'உன்னை விட்டுப் பிரியேன்' எனச் சபதஞ் செய்ய வேண்டும்; இதற்கென்ன சொல்லுகின்றாய்" என்றனர். இறைவன் வீற்றிருக்குந் தலங்களையுந் தரிசிக்க விரும்பும் தனக்கு இச்சபதம் ஓரிடையூறு ஆகுமே என அஞ்சி, ஆரூரர் இறைவனை நோக்கி "சுவாமி! அங்ஙனஞ் சபதஞ்செய்ய நான் சங்கிலியாருடன் வரும் அச்சமயத்து நீங்கள் மூலஸ்தானத்தை விட்டு மகிழ மாத்தின் கீழ் எழுந்தருள வேண்டும்; இதுவே என் வேண்டுகோள்" என வணங்கினர். "அப்படியே ஆகட்டும் நம்பி" என்று சிவபிரான் கூறி அவர் மாட்டு ஒரு திருவிளையாடலை இயற்றக் கருதியோ அன்றிச் சங்கிலியாரின் வழியடிமைப் பெருமையைக் குறித்தோ இறைவன் மறுபடியும் சங்கிலியாரிடங் கனவில் வந்து "பிரியேன் யான் என்று ஆரூரன் மூலஸ்தானத்திற் சபதஞ் செய்யின் நீ அதற்கு இசையாது மகிழமரத்தின் கீழ் சபதஞ்செய்யுமாறு செய்யவேண்டும்" எனக் கூறச் சங்கிலியாருங் கைகுவித்துச் சுவாமியின் திருவடியில் விழுந்து "யான் என்ன பாக்கியஞ் செய்தனன்" எனப் போற்றினர். இறைவனும் மறைந்தனர். பிறகு சங்கிலியாருக்குத் தூக்கம் பிடிக்க இல்லை. அங்கிருந்த சேடியரை எழுப்பித் தமது கனவை மொழிந்தனர். சேடியர் அது கேட்டு வியப்புற்றார். திருப்பள்ளியெழுச்சிக்கு மலர் தொடுக்க வேண்டிச் சங்கிலியார் திருக்கோயிலுக்கு வழக்கப்படி அவ்விரவு சென்றனர். இவர் வருவார் எனக் காத்திருந்த ஆரூரரும் எதிர்கண்டு இறைவன் திருவருளைக் கூறி யான் உம்மைவிட்டுப் பிரிவதில்லை என்னுஞ் சபதத்தை இறைவன் முன்னிலையிற் கூறுகின்றேன். மூலஸ்தானத்துக்கு வருவீராக" எனச் சங்கிலியாரை நோக்கிக்

கூறச் சங்கிலியாரின் கனவின் விவரத்தைத் தெரிந்த தாதியர் ஆரூரரை நோக்கி "இதற்காகத் தாங்கள் எழுந்தருளி மூலஸ்தானத்துக்குப் போய் இறைவன் முன்னிலையிற் சபதஞ் செய்வது தகாது" என்றனர். "பின் யான் எங்கு செய்யவேண்டும்?" என்றனர் ஆரூரர் "மகிழ மரத்தின் கீழ் அச்சபதத்தைச் செய்தால் அதுவே போதும்" என்றனர் தாதியர். இதைக் கேட்ட ஆரூரர், மனமருண்டு "இவர் சொன்னபடி செய்ய நாம் மறுத்தால் விவாகம் தவறும்; பரிகசிப்புக்கும் பழிப்புக்கும் இடமாகும். உடன்படுவதே சரி" எனத் துணிந்து "வாருங்கள்! என மகிழ மரத்தின் கீழ்ப் போய்ச் சங்கிலியார் காண அதை மும்முறை வலம் வந்து 'யான் பிரியேன்" எனக் கூறினர். சங்கிலியாரும் "ஐயோ! இறைவன் பணியால் இச்சபதத்துக்கு இவரை ஆளாக்கி விட்டோமே" என மனங்கலங்கினர். ஆரூரர் பின்னர்த் திருக்கோயிலுக்குச் சென்று "சுவாமி! நீர் செய்த வேலைத்திறம் வெகு நன்று" எனக் கூறி மகிழ்ச்சியுடன் தமது மாளிகைக்குச் சென்றனர். சங்கிலியாருங் கன்னிமாடம் புகுந்தார். இறைவனும் அன்றிரவே அவ்வூரார் கனவில் நம்பியாரூரனுக்கு நங்கை சங்கிலியாரை விதிமுறைத் திருமணஞ் செய்யுங்கள் எனக் கட்டளையிட்டனர். பொழுது விடிந்ததும் அவ்வாறே பெருஞ் சிறப்போடு கலியாணம் நடைபெறப் பெற்றது. சங்கிலியாருடன் நம்பியாரூரருங் காதற் களிப்புடன் பலநாள் அமர்ந்திருந்தனர். இவ்வாறிருக்கத் திருவாரூர் வீதிவிடங்காது வசந்தோற்சவநாள் வருவதை உணர்ந்த ஆரூரர் வீதிவிடங்கரது திருவோலக்கத்தையும் அவர் முன்னிலையிற் பரவையாரது ஆடல் பாடலையும் நேரிற் கண்டு கேட்டவர் போலக் கருதி—

"பத்திமையு மடிமையையுங் கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோ யதுவிதனைப் பொருளறிந்தேன் போய்த்தொழு
முத்தினைமா மணிதன்னை வயிரத்தை மூர்க்கனேன் [வேன்
எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என்னாரூ ரிறைவனையே."

எனவரும் 51-ஆவது திருப்பதிகத்தைப் பாடினர். பின்னர் ஒருநாள் திருவாரூர்ப் பிரிவாற்றுது கோயிலுக்குட் சென்று பணிந்து திருவொற்றியூர் எல்லையை விட்டுத் திருவாரூர் நோக்கிப் புறப்பட்டார்.

(இன்னும் வரும்.)

குசால் சிங்காரம்

அல்லது

பரிஷ்காரக் கூத்து

ஸ்ரீமாந் பண்டித S. முத்துசுவாமிப் பிள்ளை எழுதியது.

மதுரை சிங்காரவேலுப் பிள்ளை வெகு குசால் பிரியர். அமெரிக்கன் மிஷன் காலேஜிலுள்ள மாணவர்களுக் கெல்லாம் அவரே தலைவர். அவரது உடையிலும் நடையிலும் ஸ்நானத்திலும் பானத்திலும் நோக்கிலும் வாக்கிலும் மற்றும் அவர் சம்மந்தமான யாவற்றிலும் ஒரு புதுமை யுண்டு. அவர் எதை வாங்கினாலும் தூற்றிலொருவன் கண்ணைப் பிடுங்கினது போல் தேர்ந்து பார்த்தே வாங்குவார். எல்லா வீட்டு மேஜையும் சதுர மேஜை யாகவோ வட்ட மேஜை யாகவோ இருக்கும். அவருடைய மேஜையோ எண்கோண் மேஜை. எல்லாக் குடையும் கறுப்பு நிறமானால் அவர் குடை மட்டும் வெண்மை நிறமாயிருக்கும். மற்றச் செருப்புகளுக் கெல்லாம் மோட்டுவாறு இரண்டானால் அவர் செருப்புக்கு மட்டும் மோட்டுவாறு மூன்றாக இருக்கும். யாவரும் சாந்துப் பொட்டோ சந்தனப் பொட்டோ குங்குமப் பொட்டோ அணிவார்கள். அவரோ பலவிதப் பரிமளப் பொருள்கள் கலந்த பச்சைப் பொட்டே அணிவார். ஒருநாள் அணிந்த உடையை மறுநாள் அணியார்.

இவ்வாறாக அவர் காரிய மெல்லாம் புதுமையாகவே இருக்கும். ஆகவே அவருக்குக் குசால் சிங்காரம் எனப் பட்டப் பெயர் உண்டாயிற்று.

அவர் சாதாரண மாணவர்களைப் போல் பாதிச் சாமம் வரையிலும் விளக்கெரித்துக் கஷ்டப் படுவதில்லை. அவரது புஸ்தகத்தைப் பார்த்தவர்கள் அவர் ஒரு நாளாவது புஸ்தகத்தை விரித்துப் பார்த்திருப்பார் என்று எண்ணமாட்டார்கள். அவர் எப்பொழுது வாசிக்கிறார் என்பதைக் கண்டு பிடிக்க அவருடைய நண்பர்களில் சிலர் போட்டி போட்டு சிரமம் செய்து பார்த்தார்கள். கண்டு பிடிக்க முடியவே இல்லை. என்றாலும் அவர் வருஷாந்தப் பரீட்சையில் தவறாமல் ஒப்பேறி விடுவார். இது யாவருக்கும் பெரும் அதிசயமாக

இருந்தது. தேவி உபாசனையால் அவர் வருஷந்தோறும் ஜெயிப்ப தாகச் சிலர் சொன்னார்கள். வேறு சிலர் அவர் ஒரு பெரியவரிட மிருந்து பெற்ற வசீகர மந்திரத்தின் உதவியால் ஒப்பேறுவதாகக் கூறினார்கள். சிலர் விதிவலியே காரண மென்றார்கள். விதிவலியி னாலோ மதிவலியி னாலோ அல்லது இரண்டும் சேர்ந்த பெருவலியி னாலோ அவர் வருஷா வருஷம் பரீட்சையில் தவறாமல் தேறி பி. ஏ. பட்டமும் பெற்றார். பிறகு பி. எல். பரீட்சைக்கு வாசிப்ப தற்காகத் திருவனந்தபுரம் சென்றார்.

அவ்விடத்தில் பெரியசாமிப் பிள்ளை யென்று ஒருவர் இருந்தார். அவர் ஜட்ஜ் உத்தியோகத்தி லிருந்து பென்ஷன் பெற்றவர். வெகு காலம் குழந்தை யில்லாம லிருந்து காசி இராமேசுவரம் கன்னியா குமாரி முதலான புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்ற பலனாக ஒரு பெண் மணியைப் பெற்றார். நமது சிங்காரம் திருவனந்தபுரத்துக்கு வந்த காலத்தில் அவளுக்கு வயது பதினாறு. அவள் அவ்விடம் மகாராஜா பெண்கள் கலாசாலையில் ஸ்கூல் பைனல் வகுப்பில் படித்து வந்தாள். பெரியசாமிப் பிள்ளைக்குத் தன்மகள் நவரத்தி னத்தின் பேரில் அளவற்ற பிரியம். அவள் காலில் முள் தைத்தால் தன்கண்ணில் முள் தைத்தது போல் வருந்துவார். ஒரு நாள் வெற்றிலை போடுவதற்காகச் சுண்ணாம்புக் கரண்டகத்தைத் திறந்தார். சுண்ணாம்பில் நீர் சிறிது அதிகமாகக் கலந்திருந்ததினால் கரண்டகம் திறந்த விசையில், சுண்ணாம்பு நீரில் ஒருதுளி, பக்கத்தி லிருந்த நவரத்தினத்தின் கண்ணிமையில் தெறிக்க, கண் சிறிது கலங்கிற்று. பெரியசாமிப் பிள்ளை தன் இருகண்களும் அவிந்து போனது போல் பதை பதைத்து, பெரிய டாக்டரை இருபது ரூபா படிகட்டி அழைத்துக் காட்டினார். டாக்டர் சிறிது வாஸலைனைத் தடவி அன்று 12-மணிக்குள் சொஸ்தமாகி விடுமென்று கூறிப் போனார். கண் 10-மணிக்கே சொஸ்தமாகி விட்டது. ஆனாலும் அன்று முதல் பெரியசாமிப் பிள்ளை வெற்றிலை போடுவதை அடியோடே விட்டு விட்டார். ஆகவே அவருக்குப் பிள்ளைப் பிச்சன் பெரிய சாமிப் பிள்ளை யென்று பட்டப் பெயர் ஏற்பட்டது.

ஊர் வாயை மூட உலைமூடி யுண்டா!

மகளுக்கு வயது பதினாறானது முதல் அவளுக்குத் தகுந்த வரனைத் தேடுவதே அவருக்கு ஓயாத வேலை யாயிற்று. பந்துக்க

ளிடத்திலும் சிநேகிதர்களிடத்திலும் இதற்காக வேண்டிய ஏற்பாடு கள் செய்தும் அவர் நோக்கத்துக்குப் பொருத்தமான வரன் கிடைக்கவில்லை.

பிறகு வதூவரர்களை வலைபோட்டுப் பிடிக்கும் தொழிலில் தேர்ச்சியடைந்த இருவரை மாதச் சம்பளத்தில் நியமித்தார். அவர்கள் வார 'ரிப்போர்ட்டுகளை' தவருமல் அனுப்பி வந்தார்களா ைலும் ரத்னும்பாளின் மாலை பூக்கும் நாள் தூரஸ்தமாகவே இருந்து வந்தது.

இந்தக் கடுவில் நமது சிங்காரம் அநந்தையில் தோன்றினர். அவர் ரெயிலி லிருந்து இறங்கும் முன்னமே அவருடைய வரலாறு முழுதும் பெரியசாமிப் பிள்ளை காதில் விழுந்தது. சிங்காரத்தின் சுக்கிர தசையும் உதயமாயிற்று.

அவர் லாக்காலேஜில் 'அட்மிஷன்' பெறுவதற்கு முன்ன லேயே நிச்சய தாம்பூலத்துக்கு ஏற்பாடாயிற்று. மறுவாரத்தில் திருமங்கல்ய தாரண முகூர்த்தமும் வெகு விமரிசையாக நடந்தது. கலியாண வைபவங்களைப் பற்றி ஒரு பிரபந்தம் பாடிய ஒரு பிரம்ம சாரிப் புலவருக்கு, பெரியசாமிப் பிள்ளை ஒரு கலியாணத்துக்கு வேண்டிய தொகை பரிசாகக் கொடுத்தார்.

சிங்கார—தம்பதிகளின் வாழ்க்கை நலத்தை வர்ணிக்க ஒருவரா லும் முடியாது. ரதியும் மதனனும் போல் என்ருல் மதனனுக்கு உருவ மில்லை. பூவும் மணமும் போல் என்ருலோ பூவும் வாடும் தன்மை யுடையது. பாலும் பழமும் போல் என்போ மெனின் பாலும் புளிக்கும் இயல்புடையது. முடியாதவேலைக்கு மூடர்களே துணி வார்கள். ஆகையால் அது அம்மட்டில் நிற்கட்டும்.

விவாகம் முடிந்த ஒருவாரத்துக்குள் சிங்காரம் திருவனந்தபுரம் டிஸ்திரிக்டு கோர்ட்டில் சிரஸ்ததார் உத்தியோகம் பெற்ருர். சட்டப் படிப்பும் நிர்விக்கினமாக நடந்து கொண்டிருந்தது.

ஆரம்பத்தில் உவமையில்லா நிலைமையிலிருந்த சிங்கார தம்பதி களின் இல்வாழ்க்கை ஒரு வருஷம் முடிவதற்குமுன் திருஷ்டி தோஷத்தினலோ அவர்களது காலவேற்றுமையினலோ, பெரிய சாமிப் பிள்ளைக்கு அரிசி அற்றதனலோ, அல்லது என் இறகின்

பாக்கிய வசத்தினாலோ, சிறுகச்சிறுக மங்கத் தொடங்கிற்று. கருப்புக் கட்டியிலும் கல் உண்டு. ரோஜாப் புஷ்பத்திலும் முள் உண்டு. மனிதவாழ்க்கையில் துன்பம் உண்டாவது அதிசயமா?

ரத்னம்பாளிடத்துப் பித்த நோயின் குறிகள் காணத் தொடங்கின. தஹனசக்தி குறைந்தது. பசும் பொன் மேனி மினுக்கொழிந்து வாடியது. பவளச் செவ்வாய் பலாச்சுளை போல் மஞ்சணித்தது. கரியகண்ணும் முத்துப் பற்களும் பரஸ்பரம் நிறங்களை மாற்றிக் கொண்டன. எழுந்து நடக்கவும் சக்தியற்றாள். இருந்து நிரங்கவும் ஏலாதாளுள்.

உள்ளூர் டாக்ற்றர்களும் மருந்து கொடுத்துக் கொடுத்து அலுத்தார்கள். வெளியூர் டாக்ற்றர்கள் பலர் வந்து பார்த்து மனந்தளர்ந்து திரும்பினார்கள். நோயும் சிறிது சிறிதாக முற்றி அம்மாள் ஆடவும் பாடவும் புலம்பவும் தொடங்கினாள். பிறகு மந்திரவாதிகள் திருநாள் ஆரம்பமாயிற்று. அவர்கள் திருநாள் பத்துநாளல்ல— பத்து மாத காலம் நடந்தது. பயன் ஒன்றும் உண்டாகவில்லை.

பிள்ளைப் பிச்சன் பெரியசாமிப் பிள்ளை மகள் நோயுற்ற நாள் முதல் ஊணுறக்கமற்று நாளாவர்த்தியில் கவலைக் கிரையாகித் திடீரென்று மரண மடைந்தார்.

"தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று. இனி ரத்னம் சுகமடைவாள்" என்று பாட்டிமா ரெல்லாம் பல்மாகச் சொன்னார்கள்.

பசுக் கிழமானாலும் பால் புளிக்குமா? பாட்டிமார் வார்த்தை பலிக்காமல் போகுமா?

ரத்னம்பாளும் சிறிது சிறிதாய்ச் சுகமடையத் தொடங்கினாள். கஞ்சி, பால் முதலிய சிற்றுண்டிகள் உண்டால் தகன மடையு மளவு சுகம் பெற்றாள்.

சுமார் ஒரு வருஷ காலமாக, தனது இல்வாழ்க்கை துக்கபூரித மாகவே இருந்து வந்த தானாலும் ஆனந்தமே உருவாக அவதரித்த சிங்காரம் எள்ளளவேனும் குலுங்கவில்லை.

நெருப்பில் புழுப்பற்றுமா? இரும்பைக் கரையான் அரிக்குமா?

குசால் சிங்காரம்

மாமனுர் சரமக் கிரியைகளை யெல்லாம் சிறப்பாகவும் ஆடம்பர மாகவும் நடத்திய பிறகு ஜன நெருக்க முள்ள புத்தன் சந்தை வீட்டை விட்டு, காற்ரேேட்டமும் இடவிசாலமு முள்ள வெள்ளையம்ப லம் வஸந்த விலாஸம் பங்களாவில் சிங்காரம் மாறிக் குடியிருந்தார். சமையற் காரி ஒரு பிராமண விதவையும் ஒரு நாயர்ச் சிறுவன் வேலைக் காரனும் ஒரு நாயர்க் கிழவியும் வசந்த விலாசத்தில் இருந்து வந்தார்கள்.

இடமாற்றம் ரத்னும்பாளுக்குப் பெரிதும் நன்மையைச் செய் தது. பித்தக் குறிகள் மாறின. வாய்ப் புலப்பம் கணுக்காணல், பேயாட்டம் முதலியன நின்றன. தகன சக்தியும் வரவர வளர்ந்து வந்தது.

குறித்த காலந்தவருமை நமது சிங்காரத்தின் பிறவிக்குணம். 11–மணிக்குக் கோர்ட்டுக்குப் போக வேண்டும். 10-மணிக்குள் ஸ்நானம் பூஜை சாப்பாடு முதலியன முடித்து 5-நிமிஷம் இளைப் பாறி 10-5-க்குச் சிங்காரம் உடுக்கும் அறைக்குச் செல்வார். 'டிரஸ்' பண்ண சுமார் அரை முக்கால் மணி யாகும். 10-45-க் கெல்லாம் வண்டியில் ஏறி விடுவார். ஜில்லாக் கோர்ட்டில் தன் ஆபீஸ் அறை யில் அவர் கால் வைப்பதும் மணி 11-அடிப்பதும் ஒன்ருக இருக்கும்.

வழக்கப்படி ஒருநாள் 10-5-க்கு உடுக்கு மறைக்குச் சென்று 'டிரஸ்' பண்ணத் தொடங்கவே ஒரு நாளு மில்லாத திருநாளாய் பெட்டிக்குள் 'காளர்' இல்லா திருக்கக் கண்டு திடுக்கிட்டார். தலைநா ளணிந்த காலரைப் பார்த்தார். அது மாசு மறு வின்றிச் சுத்தமாகவே இருந்தது. எனினும் விரத பங்கம் வருமே என்றஞ்சி ஞர். மாணுக்கனுயிருந்த காலத்தும் ஒரு நாளணிந்த 'காளரை' மறுநாள் அவர் அணிந்த தில்லை. இப்பொழுது லட்சம் ரூபா ஆஸ்தி யுள்ள பெண்ணுக்கு நாயகனுய்—நூறு ரூபா சம்பளமுள்ள கண்ணிய உத்தியோகஸ்தனுய்—இருக்கும் இந்த நற்காலத்திலா விரதபங்கம் வருத்துவது ? ஐயோ ! அவ்வாறு எண்ணுவதும் பாவம் ! நினைப் பதும் கேவலம் !

மேஜையண்டை சென்ருர், ஒரு துண்டுக் காகிதம் எடுத்தார். 'சாம்பியன் காளர்' ஒரு டசன் என்று இங்கிலீஷில் எழுதி, தன் வேலைக்காரனை பரமுவை அழைத்தார்.

"அடே! பாளயம் மோத்தாக் கம்பெனியிலாவது, மெல் கம்பெனியிலாவது சென்று இந்தச் சிறு துண்டைக் கொடுத்து, ஒரு டசன் காளர் வாங்கிவா. இதோ! பத்து ரூபா நோட்டு, பாக்கியைக் கொண்டுவா. 'டயிம்' ஆய்விட்டது, ஜல்தி" என்றும் கூறி பரமுவை அனுப்பினர்.

பரமு தன் குடும்பி குதிங்காலில் படும்படி ஓடினன். பாளயத்தை அடைந்தான். இரண்டு கம்பெனிகளும் அடைக்கப் பட்டிருந்தன. காரணம் விசாரித்ததில் அன்று ஒரு கிறிஸ்தவப் புண்ணிய தின மென்று அறிந்தான். சில்லறைக் கடைகளில் எல்லாம் விசாரித்தான். 'சாம்பியன் காளர்' கிடைக்கவில்லை.

என்ன செய்கிறது! பரமு புத்திசாலி. சிங்காரத்தின் 'காளர்' கிறுக்கு அவனுக்கு நன்ருகத் தெரியும். வெறுங்கையோடு போவதில் பிரயோஜன மில்லை. ஆகையால் பரமு சாலைக் கடைத் தெருவுக்கு ஓடினன்.

சாலைப் பஜாருக்கும் சிங்காரத்தின் பங்களாவுக்கும் சுமார் இரண்டரை மைல் தூர மிருக்கும். மணியும் 10-45 ஆகிவிட்டது. பரமு வரவில்லை. வெளி 'கேற்றில்' சிறிது நேரம் நின்று பார்த்தார். அவனைக் காண வில்லை. என்ன செய்கிறது? ஜட்ஜ் ஸய்யத் சண்டா ஸாஹிப் பெரிய பொல்லாதவன். 11-5-க்குத் திட்டமாக கோர்ட்டு ஹாஜர் ரெஜிஸ்தரைப் பார்ப்பார். சமயத்தில் வராதவர்களுக்கு அபராதம் போடும் வழக்கம் அவர் வைத்துக் கொள்ள வில்லை. அப்படிச் செய்து ஏழைகள் வாயில் மண்ணைப் போடுவதில் அந்தப் புண்ணியாத்மாவுக்கு வெகு அதிருப்தி. அவர் நல்ல பலசாலியாகையால் ஆளும் தரமும் பார்த்து ஒன்ருே இரண்டோ கைப்பூசை கொடுப்பது தான் அவருடைய தண்டனை.

ஜட்ஜ் கையால் சிரஸ்ததார் அடி கொள்வதா? சீச்சீ! அது கேவலம்! சிங்காரம் அறைக்குட் சென்ருர். அவசரமாய், 'டிரஸ்' பண்ணினர். ஒரு கம்பளிச் சவுக்கத்தை எடுத்துக் குறுக்கு நெடுக்காய் மடக்கிக் கழுத்தில் சுற்றி ஒரு போலி வைரமிழைத்த ஊக்கால் குத்திக் கொண்டார். ஆனலும் பழைய 'காளரை' அவர் தொடவில்லை. யாராவது கேட்டால் தடுமல் என்று சொல்லிச் சமாளித்து விடலா மென்று எண்ணினர்.

குசால் சிங்காரம்

அம்மம்ம! இவருடைய 'காளர்'க் காரியமா உலகப் பேச்சாகப் போகிறது! பரம ஸாது!

சிங்காரம் ஆப்பீஸறையை அடைந்து மணியைப் பார்த்தார். மணி 11-7 ஆய் விட்டது. அவருடைய முகமும் கறுத்துப் போயிற்று. டபேதார் ரெங்கராஜு விறைத்துக் கொண்டு நிற்கிறான். சிங்காரம் அவன் முகத்தைப் பார்க்க "ஸாஹிப் கோபத்தோடு இருக்காங்க" என்று அவன் வெடித்த குரலோடு சொன்னான்.

சிங்காரம் குலுங்க வில்லை. மெல்ல மெல்ல ஜட்ஜ் அறைக்குட் சென்றார். இவர் அறைக்குள் கால் வைத்ததும் ஜட்ஜ் மைக்கூட்டை எடுத்து 'ஹூம்' என்ற உறுமலோடு இவர் நேரே வீசி யெறிந்ததும் ஒன்றாக முடிந்தன. சிங்காரம் சட்டென்று மாறினார். ஸ்படிக மைக்கூடு அவரது வலது மீசை நுனியைத் தாக்கிக் கொண்டு போயிற்று. ஆனால் கன்னங்கரிய கறுப்பு மை சிங்காரத்தின் முகத்திலும் கோட்டிலும் சிதறி விழுந்தது.

கன்னத்தில் ஜட்ஜ் ஒரு அடி அடித்தாலும் வெளியிலுள்ளவர்கள் அறிய மாட்டார்கள்! இந்தத் தண்டனையைக் கோர்ட்டார் முழுதும் அறிவார்களே!

சிங்காரம் ஒன்றும் பேசாமல் தன் ஆபீஸறைக்குள் வந்து கோட்டைக் கழற்றி ஆணியில் மாட்டி, பெருங்கவலையோடு நாற்காலியில் உட்கார்ந்து மௌனமா யிருந்தார்.

தன் தண்டனையைப் பொறுத்துக் கொள்பவரிடத்து ஜட்ஜ் ஸாஹிப் கோபங் கொள்வதில்லை. முதல் சாட்டந்தான் முரட்டுத்தனமா யிருக்கும். பிறகு அவர் கோபம் பழுக்கச் சுட்ட பசும் பொன் போல் அர்கிமிஷத்திலேயே ஆறிவிடும்.

சாலைக்கடைத் தெருவுக்குச் சென்ற பரமுவைக் கவனிப்போம். பஜார் முழுதும் அலைந்தான். ஒரு கடையில் மட்டும் அரை டசன் காலர் இருந்தது. கிடைத்தது பாக்கியம் என்று வாங்கிக்கொண்டு ஓடி வசந்த விலாஸத்தை அடைந்தான்.

"கேற்று" உள்ளே இருந்து பூட்டப் பட்டிருந்தது. "அம்மா அம்மா!!" என்று பரமு உரக்கக் கூப்பிட்டான். நடுவறையில் ஒரு

சாய்பு நாற்காலியில் படுத்திருந்த ரத்தினம்பாள் வராந்தாவில் வந்து "என்னடா?" என்று கேட்டாள்.

எஜமானுக்கு "காளரா," எஜமானனுக்கு "காளரா" என்று கத்தினான் பரமு.

இதைக்கேட்டதும் அம்மாள் இரு கரங்களையும் விரித்துப் பரத்தி 'ஹா' என்றலறிக்கொண்டு தொப்பென்று கீழே விழுந்தாள்.

பார்த்தான் பரமு. வண்டியைக்காணவில்லை. எஜமான் கோர்ட்டுக்குப் போய் விட்டாரென்றெண்ணி கோர்ட்டை நோக்கி ஓடினான்.

பரமு ஆப்பீஸறையை அடைந்த பொழுது சிங்காரம் முன் போலவே கவலையோடிருந்தார். பரமுவைக்கண்டதும் "என்னடா கழுதை?" என்ன, "அம்மாவுக்குப் பேய்க்கோட்டி, தலை சுற்றி ஆடுகிருள்" என்று பரமு மிக வருந்திக் கூறினான்.

"ஆ தெய்வமே! துன்பம் வந்தால் தொடர்ந்தா வரும்? காலையில் 'காளர்' முட்டின பொழுதே அது அவசகுன மென்றெண்ணினேன். சரியாய் விட்டது. என்று தன்னைத் தானே எண்ணிக்கொண்டெழுந்து, ஜட்ஜியண்டை சென்று விவரமெல்லாம் சொல்லி ரஜாவும் பெற்றுக் கொண்டு பரமுவுடன் வண்டியிலேறினார். போகிற வழியில் வைத்தியத்திலும் மாந்திரீகத்திலும் தேர்ச்சி பெற்ற வைரவப் பண்டிதனையும் கூட அழைத்துக் கொண்டார்.

யாவரும் வசந்த விலாசத்தை அடைந்தார்கள். ஐயோ! என்ன கொடிய காட்சி! அம்மாளின் மாலை ஒரு பக்கம்; அட்டியல் ஒரு பக்கம்; சிற்றுரு ஒரு பக்கம். எல்லாம் நாலு பக்கமும் சிதறிக் கிடந்தன. அம்மாள் தலைவிரி கோலமாய் சாய்பு நாற்காலியில் கிடந்தாள். கண்கள் மூடிய வண்ணமாக இருந்தன.

வைரவப் பண்டிதர் சந்தடி செய்யாமல் சென்று அம்மாள் மூக்கண்டை விரலை வைத்துப் பார்த்தார். 'மூச்சு இருக்கிறது. பயமில்லை. அம்மாள் உறங்குகிருள். அப்படியே கிடக்கட்டும்' என்று சிங்காரத்துக்குத் தேறுதல் கூறினார். சிங்காரம் அங்கே கிடந்த சோபாவில் சாய்ந்தார். தனக்கு அன்று நேர்ந்த துன்பங்களை யெல்லாம் ஒவ்வொன்ருக எண்ணிச் சிந்தனை செய்து கொண்டு மேல் நோக்கிய வண்ணமாய்க் கண்களை மூடிக் கொண்டு கிடந்தார்.

வைத்தியர் அவருடைய தலைமாட்டில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார்.

பத்து நிமிஷம் கழிய அம்மாள் கண் திறந்தாள். தன் கணவன் சோபாவில் கிடப்பதையும் வைத்தியர் பக்கத்தி லிருப்பதையும் பார்த்தாள். 'காளரா' நோய்கண்ட காதலனை வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டார்கள். சிகிற்சை செய்ய வைத்தியரும் வந்திருக்கிருர் என்று அவள் தன்னுள்ளே எண்ணிக் கொண்டெழுந்தாள்.

"ஆணழகா உங்கள் அருமைத் திருமுகத்தை
எப்போ நான் காண்பேனே என் கவலை தீர்வேனே"

என்ற ஒப்பாரி யோடு தன் ஆருயிர்த்தலைவன் மேல் அலறி விழுந்தாள். தன்கணவனை ஒரே பிடியாய்ப் பிடித்து ஆலிங்கனம் செய்தாள். வைத்தியரோ ஒரே பாய்ச்சலாய் வெளியில் பாய்ந்து ஓடிவிட்டார். அம்மாள் பிடியினின்றும் தப்புவதற்குச் சிங்காரம் பல விதப் பிரயத்நம் செய்தும் முடிய வில்லை.

முடிவில் "ரத்னம்! என்னைவிடு! என்னைவிடு!" என்ருர்.

"இந்த ஜென்மத்தில் விடுவேனு?" என்ருளவள் உருக்கமாக.

"என் பிராணன் போகிறதடி! தயவு செய்து விடடி! கோடி கோடிப் புண்ணிய மடி!" என்ருர் சிங்காரம் இரக்கமாக, இருவர் பிராணனும் ஒன்ருகப் போகட்டும்! உங்களைப் பிரிந்து நான் உயிர் வாழவா? இந்த ஜென்மத்தில் இல்லை" என்ருள் ரத்னம்.

கதையைச் சுருக்குகிறேன். பத்து நிமிஷ வாக்கு வாதத்துக்கப்பால் அம்மாள் பிடியை விட்டாள். தன் 'காளர்'கிறுக்கே அன்றையத் துன்பங்களுக் கெல்லாம் காரணமென்று சிங்காரம் உணர்ந்தார்.

பக்கிள் துரை.

ஸ்ரீமாந் எம். எஸ். திருவாரியன் பிள்ளை அவர்கள் எழுதியது.

இந்தியாவில் சுயராஜ்ய இயக்கம் தோன்றியதின் கை கண்ட பலன் களில் ஒன்று என்ன வெனில் இந்தியாவிலே தற்காலம் உத்யோகம் வஹிக்கும் ஐரோப்பியர்களின் மனப் பாங்கு பெரிதும் மாறுதலடைந் திருப்பதே.

அரை நூற்றாண்டுக்கு முன் இந்தியாவில் உத்தியோகம் வஹித்த ஐரோப்பிய ஸிவிலியன்களில் மிக்காரும் இந்தியர்களிடம் அன்பும் அநுதாபமும் உடையவர்களாய் இந்தியாவின் க்ஷேமத்தையே குறியாகக் கொண்டு ஸதா உழைத்து வந்தனர். ஆகவே அவர்களைப் பற்றிய ஞாபகம் இப்பொழுதும் புதுமலர் வாஸனை போல் நம்மவர் மனதில் பொலிவுற்று விளங்குகின்றது. அத்தகைய உத்தமர்களில் ஒருவர் திருநெல்வேலி ஜில்லாவிலே பல்லாண்டு உத்தியோகம் செய்த பிறகு விடுதி பெற்று இப்பொழுதும் தன் சுதேசத்தில் இறைவனருளால் பூரண சுகத்தோடு வாழ்ந்து வருகிறார். அவர் பெயர் R. K. பக்கிள். திருநெல்வேலி ஜில்லாவின் நாலு பாகங்களிலும் அந்த மகானின் ஞாபகார்த்தமாக எழுப்பப் பெற்ற ஸ்தாபனங்கள் பல நிலைபெற்றிருக்கின்றன. பக்கிள் பள்ளிக்கூடம் பக்கிள் சானல் (கால்வாய்) பக்கிள் சத்திரம், ஆதியான பெயர்களை திருநெல்வேலி ஜில்லாவில் ஸஞ்சரித்துப் பழகியவர்கள் கேட்டிருக்கலாம். திருநெல்வேலி ஜில்லாவின் தலை நகரியான திருநெல்வேலியில் ஷை பக்கிள் பெயரால் ஸ்தாபனம் பெற்ற ஒரு பெண் பள்ளிக்கூடம் இப்பொழுதும் செவ்வனே நடைபெற்று வருகின்றது. இம்மட்டோ? பக்கிள் பிள்ளை, பக்கிள் ராஜ் என்பன வாதிய பெயர் புனைந்தவர்களும் அங்கங்கே காணப் படுகிறார்கள்.

தற்காலத்தைப் போலவே மிஸ்டர் பக்கிள் காலத்தும் றெவன்யூ போர்டு ஸ்திர நிபந்தனைகளும் ஸிவில் ஸர்வீஸ் சட்டங்களும் ஏற்பட்டிருந்தன. ஷை நிபந்தனைகளுக்கும் சட்டங்களுக்கும் கீழ்ப்பட்டு நடப்பதே ஸிவிலியன்களின் கடமையாயினும், பொதுஜன க்ஷேமத்துக்கு அநுகூலமாயிருக்கும் வரை மட்டுமே நமது பக்கிள் துரை அவைகளை அநுசரித்து வந்தார். பொதுஜன க்ஷேமத்துக்குத் தடையாக ஏற்படும் காலத்து பக்கிள் துரை அவைகளை மதிப்பதே இல்லை. குடிகளின் க்ஷேமத்துக்காகச் சட்டங்கள் ஏற்பட்டனவேயன்றி சட்டங்களுக்காகக் குடிகள் ஏற்படவில்லை யென்பது அப் புண்ணிய சீலரின் கருத்தாகும்.

அவரைப் பற்றிய வரலாறுகள் பல இப்பொழுதும் திருநெல்வேலி ஜில்லாவின் பல பாகங்களிலும் கர்ண பரம்பரையாக வழங்கி வருகின்றன.

உதாரணமாக இரண்டு விஷயங்களை இங்கே கூறுகிறோம்.

பக்கிள் துரை

ஒருமுறை திருக்குறுங்குடிப் பக்கம் சுற்றுப் பிரயாணம் செய்து வருகையில் திருக்குறுங்குடிச் சத்திரத்தைச் சார்ந்த தோப்பில் கூடாரமடித்துத் தங்கி யிருந்தார். கலக்டர் வந்திருக்கும் விஷயத்தை அறிந்த ஒரு பிராமணச் சிறுவன் அவர் கூடாரத்துக்குச் சென்று அட்சதை தூவி ஆசீர்வதித்து, "தரும துரையே! எனக்கு வயது 19 ஆய்விட்டது. ஏழை யானதினால் ஒருவரும் பெண்தர முன் வருகிறார்க ளில்லை. தயவு செய்து ஒரு பெண் பார்த்துக் கட்டி வைக்கவேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும். பகவான் துரையைக் காப்பாற் றுவார்" என்று முறை யிட்டானாம்.

அப்பொழுது துரை ஒரு சாய்வு நாற்காலியில் படுத்து சுருட்டுப் புகைத்துக் கொண் டிருந்தா ராம். பிராமணச் சிறுவனது விண்ணப் பத்தைக் கேட்டதும் துரை இருகண்களையும் மூடி சில நிமிஷம் சிந்தனையில் ஆழ்ந் திருந்தாராம்.
பிறகு கண்விழித்துப் புன்னகையோடு

"பையா! உன்பெயர் என்ன?" என்றாராம்.
"என்பெயர் ஸ்ரீநிவாஸன்" என்றானாம் இளைஞன்.

"சரி! ஸ்ரீநிவாஸா! உன்னைப் போன்ற வர்களுக்கு பெண் தேடிக் கொடுப்பதற் காகத் துரைத்தனத்தார் ஒரு இலாகா இதுவரை ஏற்படுத்துவு மில்லை, அத்தகைய பொறுப்பை ஏற்றுக் கொள்வ தற்கு எனக்கு அதிகாரம் அளிக்கவு மில்லை. ஆனாலும் நீ வந்து விண்ணப்பம் செய்து விட்டதனால் என்னா லான மட்டும் பிரயாசப் பட்டுப் பார்க்கிறேன்" என்று கூறி ஒரு காகிதத்தை எடுத்து "இந்தக் கடிதம் கொண்டு வருகிற நம்முடைய ஸ்ரீநிவாஸனுக்கு அவன் இஷ்டப்படி ஒரு பெண் பார்த்து விவாகம் செய்து வைத்து ரிப்போர்ட்டுச் செய்யவும்" என்று நாங்குனேரி தாசில்தாருக்கு ஒரு ஆர்டர் எழுதி ஸ்ரீநிவாசன் கையில் கொடுத்தாராம்.

ஸ்ரீநிவாஸன் துரையை வணங்கி விடைபெற்றுச் சென்று நாங்குனேரி தாசில்தாரிடம் ஆர்டரைக் கொடுத்தான். தாசில்தார் ஆர் டரைப்பார்த்து ஆச்சரிய மடைந்து ஸ்ரீநிவாஸனைத் தன் பக்கத்தில் உட்காரச் சொல்லி வேண்டிய உபசாரங்க ளெல்லாம் செய்து வர லாறுகளை யெல்லாம் விசாரித் தறிந்தார். இந்த சமாசாரம் ஊரெங் கும் பரவிற்று. பெண்வீட்டார் 'நான் முந்தி, நீ முந்தி' என வரத்தொடங்கினர்.

பெண் கிடைப்பதே திண்டாட்டமாக இருந்த ஸ்ரீநிவாஸனுக்கு இப்பொழுது எந்தப் பெண்ணைத் தேர்ந்தெடுப்பது என்று ஆலோசனை யாயிற்று. கடைசியாக ஒரு பெண்ணை நிச்சயம் பண்ணி, தாசில்தார் மேற் பார்வையில் கோலாகல மாக விவாகமும் நடை பெற்றது.

கலக்ற்றர் துரை அடுத்த முறை திருக்குறுங் குடிக்கு ஸர்கியூட்டு வந்த பொழுது ஸ்ரீநிவாஸன் மனைவி சகிதம் சென்று துரையைப் பார்த்தான். துரை மிகுந்த மன மகிழ்வெய்தி "ஸ்ரீநிவாஸா! இப்பொழுது திருப்தியாயிற்று ? என்று கேட்டார்.

"தருமதுரையே! தங்கள் கருணையினால் பெண் கிடைத்தது. நாங்கள் காலட்சேபம் செய்வதற்கு ஏதாவது வழிவிட வேண்டும்" என்றான் ஸ்ரீநிவாஸன்.

துரை புன்னகையுடன் இறகை யெடுத்து அவனை மாதம் 15-ரூபா சம்பளத்தில் சாலை குமஸ்தாவாக நியமகம் செய்து ஆர்டர் எழுதிக் கொடுத்தாராம்.

சாலைகளிலுள்ள மரங்களை எண்ணிக் கணக்கு வைத்துக் கொள்வதே சாலை குமஸ்தாவின் வேலை. அன்று முதல்தான் சாலை குமஸ்தா உத்தியோகமும் உண்டாயிற்று.

ஸ்ரீநிவாஸனும் சுகமாக இல்லறம் நடாத்தி வாழ்ந்தான்.

இன்னொரு முறை பக்கிள் துரை ஸ்ரீ வைகுண்டம் தாலூகாவில் 'ஸர்கியூட்' சென்றிருந்த பொழுது நிலங் கரைகளைச் சுற்றிப் பார்ப்பதற்காகக் குதிரை சவாரியாகப் புறப்பட்டார். சிறிது பொழுதில் ஒரு வயற் காட்டை அடைந்தார். வயல் வரப்புகளில் குதிரை மேல் செல்வதெப்படி? ஆகவே குதிரையை ஓரிடத்தில் கட்டி நிறுத்தி விட்டு கால் நடையாகவே சென்றார்.

பக்கிள் துரை தற்காலத்திய உத்தியோகஸ்தர்களைப் போல் பங்களாவுக்குள் இருந்து கொண்டே குடிகள் அனுப்பும் மனுக்களுக்கு ஆர்டர் போடும் இயல்புடையவ ரல்ல. மனு விஷயங்களைப் பற்றி தீர்ப்புச் செய்வதற்கு நிலங் கரைகளைச் சுற்றி நோக்க வேண்டி யிருந்தால், தானே சென்று தன் கண்ணால் பார்த்துத் திருப்தி அடைந்த பின்னரே தீர்ப்புச் செய்வார்.

ஆகையால், தான் பார்க்க உத்தேசித்த நிலத்தை யடைவதற்கு அவர் வெகு தூரம் நடக்க வேண்டிய தாயிற்று. இதற்குள் உச்சிப் பொழுதும் வந்தது. சாப்பாடு வேளையும் தப்பிற்று. துரைக்குப் பசி மிகுதியினால் நடக்க முடியவில்லை. அப்பொழுது ஒரு உழவன் வயல் வரப்பில் ஒரு கூழ்ப்பானை வைத்திருப்பதைக் கண்டார்.

210330

கண்டதும் அவனிடம் சென்று "அப்பா! பசி அதிகமாயிருக்கிறது; உன் கூழில் கொஞ்சம் கொடுப்பாயா?" என்று கேட்டார். கூழ் கேட்பவர் இன்னு ரென்று உழவனுக்குத் தெரியாது. யாரோ ஒரு துரைமக னென்றெண்ணி உழவனும் கூழளிக்கச் சம்மதித்தான். துரையும் கூழருந்தித் திருப்தி யடைந்த பிறகு உழவனை நோக்கி "அப்பா! உனக்கு என்ன வேண்டும்" என்றார்.

உழவன் "துரையே! என்மகன் ஒருவன் 'மெட்ரிக்குலேஷன்' வரைப் படித்து விட்டு வேலை ஒன்று மில்லாமல் சும்மா இருக்கிறான். அவனுக்கு ஏதாவது ஒரு வேலை கொடுக்க, கலக்டர் துரை பேருக்கு ஒரு சிபார்சுக் கடிதம் வேண்டும்" என்றான்.

உடனே உழவன் மகனை சம்பிரதி உத்தியோகத்தில் நியமித்து ஆர்டர் எழுதி உழவன் கையில் துரை கொடுத்தார். உழவனுக்குண்டான ஆநந்தத்தை விளக்கவும் வேண்டுமா?

சம்பிரதி உத்தியோகம் பெற்ற உழவன் மகன் தாசில்தார் உத்தியோகம்வரை வகித்துப் பென்ஷன் பெற்று இப்பொழுதும் சுக ஜீவிதம் செய்து வருகிறார். இதுபோன்ற திருஷ்டாந்தங்க ளின்னும் எண்ணிறந்தன உண்டு. இடச் சுருக்கத்தால் இம்மட்டில் நிறுத்துகின்றேன்.

இந்திய ஸாம்ராஜ்யத்துக்கு அடிகோலியவர்கள் ரூபர்ட் க்ளைவ் போன்ற போர் வீரர்களே ஆயினும் அது நிலைபெற்றுப் பொலிவுறச் செய்தவர்கள் நம் பக்கிள் துரைபோன்ற 'ஸிவிலியன்' உத்தியோகஸ்தர்களே.

காலஞ் சென்ற ஸர் அகமத் தம்பி மரக்காயர்.

இம்மாதம் (பெப்ருவரி) 12உ செவ்வாய்க் கிழமையன்று ஸர் அகமத் தம்பி மரக்காயர் நாகபட்டணத்தில் திடீரென மரணமடைந்ததை அறிந்து மிக வருந்துகின்றோம். இவர் 1878ஆம் பிறந்தார். 18-ஆவது வயதில் வர்த்தகத் தொழிலில் புகுந்தார். கடைசியில் டெல்ஹி கௌண்ஸில் ஆப் ஸ்டேட்டுக்கு மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று இறக்கும் வரையிலும் அந்தஸ்தானத்தையும் கௌரவமாக வஹித்து வந்தார். இவருடைய மரணத்தால் மகமதிய சமுதாயம் ஒரு உற்ற துணைவனையும் இந்திய நாடு ஒரு உத்தம தேசாபிமானியையும் இழந்தன வென்றே கூறவேண்டும். கனம் மரக்காயரின் ஆத்மா சாந்தி யடையுமாறு இறைவனருளை வேண்டுகின்றோம்.

நித்திரை

சில விதிகள்.

காந்தத்திற்கு ஆகர்ஷணம், திரோதானம் என்னும் இரண்டுவித மான சக்திகளுண்டு. இவ்விரண்டு சக்திகளும் மானிட சரீரத்திலும் உள்ளன. ஓர் காந்த ஊசியைக் கயிற்றின் நுனியிற் கட்டி அக்கயிற் றின் மற்றொரு தலைப்பை நாம் கையில் பிடித்துக்கொண்டால் அந்த ஊசியானது கொஞ்ச நேரம் ஆடி, பிறகு வடதிசை நோக்கி நிற்கும். மானிட சரீரத்தையும் அக்காந்த ஊசிக்கு ஒப்பிடலாம். உலகத்தில், பூகோள சாஸ்திரத்திற் சொல்லிய சமரேகைக்கு உத்தரப் பிர தேசங்களில் வாசம் செய்கிறவர்கள் வடக்கே தலையை வைத்துக் கொண்டு படுக்கவேண்டும். பிரான்சு தேசத்திலுள்ள சாஸ்திர சாலையில் வித்துவான்கள், சிரச்சேதம் செய்யப்பட்ட வொரு சரீரத் தைச் சில பரீக்ஷைகள் செய்தார்கள். அச்சரீரத்தின் சிரசு வெட்டப் பட்ட பிறகு, அது உஷ்ணத்துடனிருக்கும் பொழுதே அதைக் கொண்டுவந்து ஒரு சுழியாணியின்மேல் வைத்தார்கள். உடனே அச்சவம் அங்குமிங்கும் ஆடுவதற்கு ஆரம்பித்தது. சிறிது நேரம் அவ்விதமாடிக்கொண்டிருந்து, அந்த சிரசு வடக்கே நோக்கினவுடன் அச்சவம் அசைவற்று நின்றுவிட்டதாம். மறுபடியும் அதை வேறு திக்கில் திருப்பிவிட்டுப் பார்த்தும் அது முன்போலவே வடக்கு முக மாய்த் திரும்பி நின்றதாம். இவ்விதப் பரீக்ஷையினால் மானிட சரீரத் திலும் காந்தத்திற்குள்ள ஆகர்ஷண சக்திகளிருக்கின்றன வென்றும், அவற்றி லொன்று உத்தர திக்கை நோக்கியது; மற்றொன்று அதோ முகமான தென்றும் நன்கு ஸ்தாபிக்கப் படுகின்றது. இந்துசாஸ்திரப் பிரகாரம் ஒருவன் கிழக்கு திக்கில் தனது சிரசை வைத்துப் படுத்தால் அம்மனிதன் மிகவும் கல்வியிற் பயிற்சி யுள்ளவனுவான். தெற்கு திக்கில் சிரசு வைத்துப் படுத்தால், விசேஷ பலத்தையும் ஆயுள் விருத்தி யையும் அடைவான். மேற்கில் சிரசு வைத்துப் படுத்தால் கெட்ட எண்ணங்களால் கஷ்டப் படுவான். வடக்கு திக்கில் சிரசு வைத்துப் படுத்தால் வியாதியும், சரீரா சௌக்கியமு மடைவான். இதற்கிணங்கவே.

தன்னூர் கிழக்கு
தங்கினவூர் மேற்கு
வேட்டகத்தூர் தெற்கு
வேண்டாதவூர் வடக்கு

என்ற வசனமும் வழங்குகின்றது. மிக அற்பமாகவும் எளிதாகவு முள்ள இவ் விதிகளைப் பின்பற்றி நடத்தல் சரீர சாதனத்திற் குற்ற தோர் நல்வழியாகும். (ஆர்யதர்மம்)

தொழில்

எலும்பின் உபயோகம்.

மேனாட்டார் அற்பப் பொருளையும் பயனுடைய தாக்குவர். நாமோ விலை யுயர்ந்த பொருளையும் பயனற்ற தாக்குவோம். அவர்கள் நம்மை விடக் கல்வியிலும் நாகரீகத்திலும் செல்வத்திலும் மற்றும் எவ்வகையிலும் மிகுந்திருக்க ஏற்பட்ட காரணங்களுள் இதுவும் ஒன்றே.

நம் நாட்டுப் பிரபுக்கள் தங்கள் கையிலுள்ள பணங்களைப் பூமிக்குள் புதைத்து, பார்த்துப் பார்த்து ஏங்கவோ, ஒழுக்கறைப் பெட்டிக் குள் சேமித்து, நோக்கி நோக்கி மகிழவோ, பாழ் நிலங்களை வாங்கிப் பண்படுத்தும் வகை யறியாது நூற்றுக்கு இரண்டு வட்டி யாவது பெருமல் வருந்தவோ செய்கிறார்கள்.

மேனாட்டுப் பிரபுக்களோ பற்பல வித கைத்தொழில்களில் தம் கைப் பணத்தை முடக்கிப் பதினாயிரக் கணக்காக இலாபம் அடைகிறார்கள். நம் நாட்டிலுண்டாகும் பருத்திகளைச் சேகரித்து நூலாக்குவதும், கருப்புக்கட்டிகளைச் சேகரித்து சீனியாக்குவதும், மலைப் பிரதேசங்களில் காப்பி, தேயிலை, ரப்பர் முதலியன பயிரிடுவதும் நாமா ஐரோப்பியர்களா ? நமது நாட்டில் இயல்பாகவே எல்லாப் பாக்கியமும் நிறைந்திருந்தும் அவைகளை அநுபவிக்க மதியற்றவர்களாய், வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கழும் புத்திசாலிகளாக இருக்கின்றோம்.

உழைப்பும் ஊக்கமும் யுக்தியு முடையார்க்கு நமது நாட்டினும் செல்வம் பொருந்திய நாடு வேறொன்று மில்லை.

நமது நாட்டில் நாள் தோறும் எத்தனையோ கால்நடைகள் மரணமடைகின்றன. கால்நடைகளுக்கு நோய் கண்டவுடன் தானே பறையரை யாவது, சக்கிலியரை யாவது தேடத் தொடங்குகிறோம். கால்நடை கண்மூடினால் உடன்தானே அவர்களிடம் ஒப்புவித்து விட்டு "ஆ! சனி தொலைந்தது !" என்று சமாதான மடைந்து விடுகிறோம். அவர்களோ தோலையும், சிலவேளை மாமிசத்தையும் எடுத்துக் கொண்டு எலும்புகளைப் பயனற்றதெனத் தள்ளி விடுகிறார்கள்.

இவ்வாறாகத் தள்ளப்படும் எலும்பானது எவ்வளவு பிரயோஜனமானது என்று யாராவது அறிந்த துண்டா? அல்லது அறியத் துணிவ துண்டா? அல்லது யாரேனும் சொன்னாலும் செவி கொடுப்ப துண்டா ? இல்லை ! இல்லை ! !

நம்மவரில் ஒருவராது அதைக் கவனித்ததுண்டா? கரும்பு தின்னவும் கைக்கூலி கேட்கும் குணம் நம்மை விட்டு எப்பொழுது போகும்? எலும்பின் உபயோகங்களைச் செவ்வையா யறிந்து அதைப் பக்குவப்

படுத்தத் தொடங்கினால் வருஷா வருஷம் வெளிநாட்டுக்கு ஏற்று மதி செய்யப்படும் அரைக்கோடி ரூபா விலை பெறுமான எலும்பு வீண் போகுமா? வெளிநாட்டார் நம்மிட மிருந்து அரைக்கோடி ரூபாவுக்கு எலும்பு வாங்க வேண்டுமானல் அவர்களுக்கு அதனல் எத்தனைகோடி ரூபாவுக்கு இலாபம் இருக்க வேண்டும்! வெளிநாட் டார் அடையும் இலாபத்தை நாம் தானே அடைய முயன்றால் அது ஒருபொழுதும் பேராசை யாகாது. ஆகையால் எலும்பின் பயனைப் பற்றிச் சிறிது சொல்லத் தொடங்குகிறோம்.

நம்மவரில் அநேகர் உபயோகிக்கும் பசையும், சோப்பும் எலும் பிலிருந்து உண்டாக்கப் பட்டவை யென்றால் அநேகர் நம்ப மாட்டார் கள். ஆனல் உண்மை அப்படியே. எலும்பைப் பக்குவப் படுத்தும் போது கிடைக்கும் ஒவ்வொரு பொருளும் நமக்கு உபயோக மானதே.

எலும்பைத் தொழிற் சாலைக்குக் கொண்டு போனவுடன் சுத்தப் படுத்துவதே முதன் முதல் செய்யப்படும் வேலை. எலும்பின் மீது ஒட்டியிருக்கும் உலர்ந்த மாமிசம் முதலியன வற்றை நீரால் கழுவிச் சுத்தப் படுத்திய வுடன் இனம் பிரித்து ஒரு இயந்திரத்தில் போட்டுப் பொடித்து ஒரே கட்டியாக ஆக்குவார்கள். இந்தக் கட்டியைப் பின்னர் கந்தகாமிலம் (Sulphuric acid) கலந்த நீரில் சிறிது தோய்த்து வைப்பார்கள். இவ்வாறு தோய்த்தெடுத்த பின்னர் எலும்புக் கட்டி மிக வெண்மை யாயும் சுத்தமாயு மிருக்கும். பின்னர் Digester என்னும் இயந் திரத்திலிட்டு நீராவியின் உதவியால் அநேக மணி நேரம் இறுக்குவார் கள். நன்றாய் இறுக்கப்பட்டபின் டைஜஸ்டர் இயந்திரத்தி னடியில் உள்ள ஒரு அடைப்பைத் திறந்து அதன் வழியாய் எலும்புக் கட்டி யிலிருந்து உற்பத்தியான பசையைத் திரவ ரூபமாக வடித்து எடுப் பார்கள். இந்தத் திராவகத்தை வற்றவைத்து, ஒரு பகுதியைக் கட்டிப் பசையாகவும், ஒரு பகுதியைப் பாகாகவும் ஆக்குவார்கள். எலும்பிலிருந்து எடுக்கப்பட்ட கொழுப்பை சுத்தப்படுத்தாமல் துணிகள் துவைப்பதற்கு உபயோகமான சோப் புண்டாக்கு வார்கள். ஸ்நானதிகளுக்கு உபயோகமான சோப்புண்டாக்க வேண்டுமானல் அந்தக் கொழுப்பை நன்றாய்ச் சுத்தப் படுத்திப் பலவிதமான கமழ் பொருள்களோடும் எண்ணெய்களோடும் சேர்த்து பக்குவப்படுத்து வார்கள். சோப்புண்டாக்கப்படும் பாத்திரத்திலிருந்து ஆவியாக மேலேவரும் நீராவியைக் குளிரச் செய்து Glycerine என்னும் பொருள் உண்டாக்கப் படுகிறது.

கடைசியாக "டைஜஸ்டர்" இயந்திரத்தில் மீதமாகும் கொத்து அல்லது சவுறுகிய எலும்பைப் பொடித்து உரமாக உபயோகப் படுத்துகிறார்கள். முதன் முதல் எலும்பைச் சுத்தப் படுத்துவதற் காக உபயோகிக்கப் படும் நீரையுங் கூடக் காய்ச்சி வடித்து உரமாக்கி விடுகிறார்கள்.

ஆகவே நாம் அற்பமென எண்ணித் தள்ளுகிற எலும்பானது எவ்வளவு உபகார மானதென்று இதனால் ஒருவாறு விளங்கும்.

இவ்வாறு மஹத்தான உபயோகமுள்ள எலும்பைப் பக்குவப் படுத்துவதற்கு இதுவரையிலும் நமது தேசத்தில் ஸ்தாபிக்கப்பட் டிருக்கும் தொழிற் சாலைகள் அநேக மிருப்பதாகத் தெரியவில்லை. இது எவ்வளவு பரிதாபம் !

S. M. P.

பிளேக் அல்லது மகாமாரி

தூத்துக்குடி, சேலம் முதலிய இடங்களில் "பிளேக்" தலை காட்டியிருப்பதால் இந்த சந்தர்ப்பத்தில் அந்நோயின் தன்மையைப் பற்றி நம்மவர் அறிந்திருத்தல் அவசியமென எண்ணி பாததுலமித் திரனில் டாக்டர் தங்கம் அவர்கள் எழுதிய விஷயத்தைக் கீழே வெளியிடுகின்றோம்.

பிளேக் வியாதி மூன்று விதமாம். அதாவது (1) செப்டசெமிக் பிளேக், (2) நியூமானிக் பிளேக், (3) பூபானிக் பிளேக். இவைகளுக் குப் பொது அடையாளங்கள் :—

ஜாஸ்தியான காய்ச்சல், தலைவலி, உடம்புவலி, புலப்பம் முதலி யன தோன்றும். விழிகள் சிவந்திருக்கும். நோயாளியைப் பார்த்தால் குடிவெறி கொண்டவன் போலிருப்பான். ஞாபகம் அநேகமா யிருக்க மாட்டாது. இருந்தாலும் சொற்ப மாய்த்தா னிருக்கும். வர வர வியாதியின் கொடுமை ஜாஸ்தி யாகும். பூபானிக் பிளேக்கில் முன் சொல்லிய அடையாளங்களுடன், அரையிலோ, இடுப்பிலோ, அக்குள் களிலோ, கழுத்திலோ, கட்டிகள் புறப்படும்.

செப்டசெமிக், நியூமானிக், பிளேக்குகளில் கட்டிகள் தோன்றுவ தில்லை. ஆனால் கபவாத ஜுரத்தின் முக்கிய அடையாளங்க ளாகிய மூச்சு முட்டுதல், நெஞ்சுவலி, இருமல், கோழையில் இரத்தம் தோன்றுதல் முதலிய அடையாளங்கள் தோன்றும்.

இவ் வியாதியில் இரத்தப் பையானது விசேஷ சேதத்தை யடைந்து மரணம் சம்பவிக்கின்றது. நாளிதுவரை தகுந்த ஒளஷ தங்கள் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிற தாகத் தெரியவில்லை. வியாதி வராமல் தடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுப்பதுதான் அவசி யம். இவ் வியாதியானது எலிகள் மூல மாகவேதான் பரவுகிற தென் றும், எலிகளின் பேரில் ஒட்டியிருக்கும் தெள்ளுப் பூச்சிகள் எலிகளை ஒட்டிக்கொண்டு அவைகளைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சும்போது, பிளேக் வியாதியாயுள்ள எலிகளா யிருந்தால், பிளேக வியாதிப் பூச் சியும் இந்தத் தெள்ளுப் பூச்சிகளின் சரீரத்தை யடைகிறதென்றும், பிளேக் வியாதி கண்ட எலி செத்ததும் தெள்ளுப்பூச்சிகள் அந்த எலியை விட்டு வெளியாகி தரையில் நகர்ந்து மற்ற எலிகளைத்

தேடியோ அல்லது மற்ற இடங்களுக்கோ செல்லுகிறதென்றும் இப்படிச் செல்லும்போது மனிதன் அகப்பட்டு விட்டால் அவனைக் கடித்து எலிகளின் சரீரத்திலிருந்து அவைகள் உட்கொண்டிருக்கும் பிளேக் வியாதிப் பூச்சிகளை உட்செலுத்துகிறதென்றும் ஆகையினால் மனிதனுக்கு பிளேக் வியாதி ஏற்படுகிறதற்குக் காரணம் தெள்ளுப் பூச்சிகளின் சடிகள்தான் என்றும், இந்தத் தெள்ளுப் பூச்சிகள் எலிகள் மூலமாய்த் தான் வீட்டிற்குள் செல்லுகிறதென்றும் பலவித சோதனைகளால் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். பிளேக் வியாதிக் கிருப்பிடம் எலிகள். எலிகளிடமிருந்து பிளேக் வியாதியை மனிதனுக்குக் கொடுக்கக் கூடியது எலிகளின்பேரில் ஒட்டியிருக்கும் தெள்ளுப்பூச்சிகள். ஆகையினால் நம்முடைய வீடுகளை எலிகளில்லாமல் வைத்துக் கொள்வது மிகவும் அவசியம். மறைவு கிடைக்கக்கூடுமிடங்களிருந்தால் தான் விசேஷமாய் எலிகள் வந்து அடையும்.

ஆகையால் எலிகள் சேருவதை தடுக்கவேண்டும். பொறிகள் வைத்துப் பிடித்து எலிகளை வெளியாக்கவேண்டும். பொந்துகளை அடைக்கவேண்டும். எல்லா இடங்களிலும் பகல் காலங்களில் நன்றாய் வெளிச்சமிருக்கும்படியாய் எல்லா அறைகளையும் திறந்து வைக்க வேண்டும். சூரிய கிரணங்கள் பட்டால் இவ்வியாதிப் பூச்சிகள் சீக்கிரம் மாண்டு விடுகின்றன. ஆகையினால், சூரிய கிரணங்கள் வீட்டின் அநேக இடங்களில் விழும்படியாய்ச் செய்யவேண்டும். துணிகளையும் படுக்கைகளையும் தினந்தோறும் வெயிலில் உலர்த்தி எடுக்கவேண்டும். பிளேக் வியாதி காலங்களில் வெறுங் காலுடன் நடக்கக் கூடாது. ஜோடு அணிந்துகொள்வது மிகவும் அவசியம்.

விசேஷக் குறிப்புகள்

உதியமரத்தின் இலை:—தேயிலையின் ஸ்தானத்தை இப்பொழுது உதிய மரத்தின் இலை கைப்பற்றிக் கொண்டிருக்கின்றது. கொல்லம் ரோட்டின் அருகில் தன்படியே வளர்ந்திருக்கும் இம்மரத்தின் இலையை விருதுப்பட்டியிலுள்ள வியாபார எஜெண்டு சிறிது விலை கொடுத்துவாங்கி வங்காளத்திலுள்ள ஒரு சேட்டுக்கு அனுப்புகின்றார். சேட்டு அவைகளைச்சிறிது உருவமாறுதல் செய்து அழகான முறையில் மனோகரமான 'லேபில்' ஒட்டி டப்பிகளில் பல தேசங்களுக்கும் அனுப்புகிறார். இப்பொழுது அதற்கு நாட்டுத் தேயிலை என்று பெயரிடப்படுகின்றது. தேயிலைக்குள்ள விலை இந்த உதிய இலைகளுக்குக் கிடைக்கின்றது. உதிய இலைகளின் ஜாதகத்தில் இப்பொழுது சுக்கிர தசை நடைபெறுகின்றது. இந்த சுக்கிர தசை எல்லாப் பொருள்களுக்கும் உண்டாகவேண்டும்.—"இந்திய விவசாயம்."

பூமிக்குள் ஆச்சரியங்கள்:—மிஸ்டர் ஆல்பிரட் ஹார்டல் என்ற பிரான்ஸ் தேசத்தவர் பிரான்ஸ் தேசத்திலுள்ள ரபென்னல்

என்ற மலையிலிருக்கும் பெரிய குகை யொன்றைப் பரிசோதிக்கச் சென்றாராம். அக்குகை பூமிக்குள் பல ஆயிரம் அடிகள் தூரத்துக்குச் சென்றதாம். அவர் நூலேணி வழியாக அதில் இறங்கினாராம். மின்சார உதவியினாலுண்டான வெளிச்சத்தை உபயோகித்துக் கொண்டு அங்கிருக்கும் பல அதிசயங்களைக் கண்ணாரப் பார்த்தாராம். பூமிக்குள் பல நீரோட்டங்கள் வெகு வேகமாய்ச் செல்கின்றனவாம். தங்கச் சுரங்கங்கள் பல தகதகவென மின்னுகின்றனவாம். அழகிய ஏரிகள் பல அங்கு காணப்படுகின்றன வாம். ஓர் பக்கத்தில் பெரும் தீ திகுதிகு வென எரிந்து கொண்டிருக்கிறதாம்.

போர்க்கப்பல் கூட்டம்—சுற்றுப்பிரயாணம் செய்யும் பிரிட்டிஷ் கப்பல் கூட்டங்கள் 196நாள் கடலிலும் 111நாள் துறைமுகத்திலும் ஆக 307நாள், சுய தேசத்திற்கு வெளியி லிருக்குமாம். அதின் நீண்ட பிரயாணம் 3243 மைல்கொண்ட, பிரான்ஸிஸ்கோ பனமா, பிரயாணமாம். அதற்கடுத்த நீண்ட பிரயாணம் 2750மைல் அடங்கிய பிளிமத்திலிருந்து சீராலியோன் செல்லும் பயணமாம்.

ஓர் அதிசயம்—திருவண்ணாமலையைச் சேர்ந்த கீழ்காத்தூரில் ஓர் வேப்பமரத்தி னின்றும் இரண்டு நாட்களாகப் பால் பொங்கி வருகிறது. அதைத் துடைத்தாலும் அதிகமாக பொங்குகின்றதே யொழிய நின்றபாடில்லை. இவ்வாறு பொங்குவது ஊரில் வைசூரி காண்பதற்கு அறிகுறியெனப் பெரியோர்கள் அதற்குப் பூஜை செய்து வருகிறார்கள்.

கடல் மூழ்கிக்கப்பல் (சப்மேரின்)—தற்சமயம் கடலுக்குள் மூழ்கிச் செல்லும் கப்பலுக்குள் இங்கிலாந்தில் புதிதாகத் தயாரிக்கப் பட்டிருக்கிற 'XI' என்ற கப்பல் தான் பெரிதானது என்பதாகக் கருதப் படுகிறது. அது சமுத்திரத்தின் மேல் செல்லும் ஒரு பெரிய சண்டைக் கப்பலின் வேகமளவு செல்லக்கூடும். அதில் பெரிய பீரங்கிகளும் வைக்கப் பட்டிருக்கின்றன. அதனுடைய கிரயம், 820,000 பவுன்களுக்கு மேலாகின்றது என்பதாகத் தெரியவருகிறது.

ஒரு விநோத குடும்பம் :—இங்கிலாந்திலுள்ள ஓர் கிராமத்தில் 68 வயது சென்ற ஒருவர் இரண்டாவது மனைவியாக 22 வயதுப் பெண்ணை கலியாணம் செய்துகொண்டார். ஏற்கனவே அவருக்கு 40 வயதில் ஓர் மகனிருக்கிறான். ஆக 22 வயது பெண் 40 வயதுப் பிள்ளைக்குத் தாயாராகிவிட்டாள். அந்த 40 வயது மகன் தன் தகப்பனின் மாமியாரை மணந்துகொண்டார். ஆகவே மகனே தகப்பனுக்கு மாமனாரானார். மாற்றாந் தாய்க்கும் தகப்பனானார். இதனிடையில் 68 வயது தகப்பனை மணந்துகொண்ட 22 வயதுப்பெண்ணுக்கு ஓர் குழந்தையும் பிறந்தது. அக்குழந்தைக்கும், 40 வயது மகனுக்கும் என்ன உறவு? அக்குழந்தைக்கும் அதன் பாட்டிக்கும் என்னமுறை சம்மந்தம்? நேயர்களே யூகித்தறிக.

கூந்தற் சிகிச்சை—தலைமயிரைச் சரியானபடி பாதுகாப்பது ஒரு முக்கியமான விஷயம். அநேகருக்கு அந்த விஷயம் செம்மை யாகத் தெரிவதில்லை. தலையில் சுண்டு பிடிப்பதும், தலைமயிர் உதிர் வதும், பூராவாக வழுக்கை விழுவதும், மற்றும் பலவகைப்பட்ட வியாதிகள் உச்சந்தலையில் தோன்றிப் பீடிப்பதுமான காரணங் களைப்பலர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள்.

வைத்திய விற்பன்னர் சிலர் மயிர்க் கால்களுக்குப் போதுமான ஸத்து இல்லாததனாலே வழுக்கை விழுவதற்குக் காரணமுண்டாவ தாகக் கூறுகிறார்கள். ரத்தத்தினாலேயே ரோமத்தின் அடிக்கால் கள் போஷிக்கப் படுகின்றன. அப்படிப்பட்ட போஷிப்பு குறைவு படுமானால் ரோமத்தின் அடிக்கால்கள் பலம் குன்றிப்போகும். பலன் குன்றும்போது மயிர் உதிர்ந்து போனால் கண்ணெதிர்படுவது வழுக் கைத்தலை அல்லாது வேறல்ல. இது இங்ஙனமாயின், வழுக்கைத்தலை விழாதிருக்க "ரத்த விருத்திக்கான மருந்தை" உட்கொள்வது அவசியமாகும்.

ரோமத்தின் அடிக்கால்களுக்குப் போஷிப்பு இருக்க வேண் டியது உண்மைதான். அந்தப் போஷிப்பு வெளிப்புறத்திலிருந்தே அளிக்கப்படவேண்டும். எப்படியென்றால் தலைக்கும் ரோமத்திற் கும், தைலத்தை நன்றாகத் தேய்த்துத் தடவவேண்டும். அப்படிச் செய்யாமற் போனால் தலை உதிர்ந்துபோய் (அசறு) பிடிக்க ஆரம்ப மாகிறது. ஈரமில்லாத காரணம்பற்றி எப்படிப் பயிர் பச்சைகள் உல ர்ந்து வாடி வதங்கிப் பட்டுப் போகின்றனவோ அப்படிப்போலவே "ஜீவஸத்தைக் கொடுக்கும் தைலம்" இல்லாத காரணம் பற்றி தலைமயிர் உதிர்ந்து நாசமாகி விடுகின்றது.

எவ்வளவு சௌகரியத்தோடு கூடினவர்களது கூந்தலானாலும் சரியானபடி போஷிப்பு இருக்கவேண்டும். தொடர்ச்சியாகத் தைலத்தைத் தடவி உபயோகிக்க வேண்டும். இயற்கையிலேயே அளிக்கப்பெற்ற கடாட்சத்தை அடிக்கடி போக்கிவிட்டு இறுதியில் கடவுளைத் தூறுவதில் பயனென்ன?

மதிப்புரைகள்

காந்தி புராணம்:—இது, திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமதி பண் டிதை அசலாம்பிகை அம்மையார் செய்யுள் நடையில் எழுதிய ஒரு அழகிய நூல். காந்தியடிகளின் பிறப்பு முதல் 1922 மார்ச்சுமாதம் 10-உ ராஜ நிந்தனைக் குற்றம் சாட்டப்பட்டு, சிறைவாசத் தண்டனை விதிக்கப் பெற்றதுவரை யுள்ள வரலாறுக ளெல்லாம் மிகத் தெளி வாக இதில் கூறப் பட்டுள்ளன. ராஜீய விஷயங்களையும் செய்யுளி லமைத்துப் பாடுதற் கேற்ற சொல்லாற்றல் நமது தமிழ் மொழிக்கு முண்டென, இந்நூல் வெளியீட்டால், அம்மையார் சந்தேகமற

விளக்கி விட்டனர். தளைக்குட் படுத்தற் கரிய பிறமொழிச் சொற்களைச் செய்யுளில் அமைத்துப் பாடுவதில் அம்மையார் காட்டியிருக்கும் திறமை மிகவும் வியக்கற் பாலதே. கவிச் சக்கரவர்த்தியாகிய கம்ப நாட்டாழ்வாரின் கவிநயம் இந்நூலின் பல பாகங்களிலும் மலிந்து விளங்கு கின்றது. எதுகை மோனை யாதிய விதிகளுக்குட் பட்டுக் கவி யெழுதத் தொடங்கினால் மொழிகளுக் கேற்ற வாறு கருத்தைத் திருப்பும் இடர்ப்பாடு ஏற்படுமென்றும் அதனால் எதுகை மோனைகளைக் கவனியாது செய்யுளியற்றலே சிறப்புடைய தென்றும் கூறுவர் சில புதுக் கருத்தாளர். அன்னோர் நமது அம்மையாரின் கவிகளை வாசிப்பா ராயின், பகீரதன் பின்சென்ற கங்கையைப்போல், அம்மையாரின் கருத்துக்கிசையத் தமிழ்மொழி பெருக்கெடுத் தொழுகுவதைக் கண்ணுற்று மயக்கம் நீங்கா தொழியார். தேச முன்னேற்றத்துக்கு இத்தகைய நூல்கள் பெரிதும் இன்றி யமையாதன. ஆகவே, காந்தியடிகள் சிறை புகுந்தது முதல் விடுதலை பெற்றது வரையுள்ள சரித்திரத்தையும் ஒரு காண்டகமாகத் தொகுத்து வெளியாக்கு மாறு அம்மையாரை வேண்டு கின்றோம். நூலின் பெருமையைக் கவனித்தால் அதற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் விலை ரூபா ஒன்று மிகச் சொற்பமே. தமிழ்மக்கள் இந்நூலை வாங்கிப் படித்துப் பயனடைவார்க ளாக!

நபிகள் நாயகமும் நான்கு தோழர்களும்:—இது, தாருல் இஸ்லாம் பத்திரிகாசிரியர் ஸாஹிப் பகதூர் பா. தாவுத்ஷா அவர்களால் எழுதப்பட்டது. கிலாபத் பிரச்னையானது மிக மும்முரமாக நடந்துவரும் இக்காலத்தில், அந்தக் 'கிலாபத்'தின் ஆரம்பகால வாழ்க்கையானது எவ்வாறு இருந்து வந்த தென்றும் முஸ்லீம் அரசாங்கம் எவ்வாறு நிலை நிறுத்தப் பட்டிருந்த தென்றும் தெரிந்து கொள்ள இச்சிறு நூல் பெரிதும் பயன்படு மென்பதற்கு ஐயமில்லை. இந்தியர்களெல்லாம் இந்நூலை வாசிக்க வேண்டியது அவசியமே. நூல்நடை தெளிவாகவும் அழகாகவும் இருக்கின்றது. விலை ராப்பர் பைண்டு ரூ. 1-8-0, காலிகோ பைண்டு ரூ. 2.

தாஜ் மஹால்:—இதுவும் மேற்படி பா. தாவுத்ஷா ஸாஹிப் அவர்களால் எழுதப்பட்டதே. உலகெலாம் போற்றும் தாஜ் மஹாலைப் பற்றிய வரலாறு. தாஜ் மஹாலின் இரண்டு ஆப்டோன் படங்களும், ஷாஜஹான் மும்தாஜ் ஆகிய இருவர் படங்களும் இதில் சேர்க்கப் பட்டுள்ளன. விலை அணா 4.

பூரண சுகம்:—இது, சுவாமி அபேதாநந்தர் அவர்களின் ஆங்கில உபந்யாசத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு. பூரணசுக மென்பது என்ன? அதனை அடைவதெப்படி? அது எப்போது கைகூடும். சரீரத்தில் எதனை ஒழித்தால் அச்சுகம் கிடைக்கும். என்பன வாதிய விஷயங்கள் இதில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. விலை தபாற்செலவு உள்பட அணா 2. கிடைக்குமிடம் லோகோபகாரி ஆபீஸ், சென்னை.

நவரச மஞ்சரி :—இப்பெயர் புனைந்த பத்திரிகை யொன்று 1924-ஹூ ஜனவரிமீ 1வ முதல் வெளிவரத் தொடங்கி யிருக்கின்றது. முதல் ஸஞ்சிகையில் வில்லிபுத்தூரார் பாரதத்தில் சிறப்புப் பாயிரமும் தற்சிறப்புப் பாயிரமும் ஆதிபருவம் குருகுலச் சருக்கத்தில் 33-பாடல்களும் பதவுரை விசேஷவுரை இலக்கணக் குறிப்புகளுடன் வெளிவந்துள்ளன. மீதப் பாகங்களும் மாதந்தோறும் இந்த ஸஞ்சிகை வாயிலாக வெளிவரு மென்று கூறப்பட் டிருக்கிறது. "ஹிதோபதேசம்" என்னும் அருமையான விஷயங்களும் வடமொழியிலிருந்து மொழி பெயர்த்துக் கொடுக்கப் பட்டுள்ளன. தமிழிலக்கிய வளர்ச்சியை லக்ஷ்யமாகக்கொண்டு வெளிவரும் இப்பத்திரிகையைத் தமிழுலகத்தார் ஆதரிக்க முன் வரவேண்டியது மிக அவசியமே. பத்திரிகை நல்ல கடிதத்தில் திருத்தமுற அச்சிடப் பட்டுள்ளது. சந்தா 6-மாதத்துக்கு ரூ. 3. ஒரு வருஷத்துக்கு ரூ. 5-8-0. வேண்டுவோர் தங்கசாலைத் தெரு, 511-ம் நம்பர் வீட்டில் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

வணிக மும்மணி :—இதன் ஆசிரியர் இராமச்சந்திரபுரம் B. N. C. A. காரியதரிசி ஸ்ரீமாந் S. பழனியப்பா அவர்கள், நாட்டுக்கோட்டை நகர வணிகர்களுக்காக இது எழுதப் பட்டுள்ளது. இதில் கூறப்படும் கதைகள் மூன்றும் பெரிய புராணத்தும் திருவிளையாடற் புராணத்தும் உள்ளனவாம். இச் சரிதைகளின் இடையிடையே நகர வணிக சமுதாயத்தாரின் வழக்க ஒழுக்கங்களில் உள்ள இழுக்குகளையும் அவற்றைக் களையும் மார்க்கங்களையும் தெளிவாகக் காட்டப் பட்டுள்ளன. விலை அணா 6.

சீவாத்தினம் என்னும் தினசரி வாழ்க்கை :—இதுவும் மேற்படி பழனியப்பா அவர்கள் இயற்றிய நூலே. காலை விழிப்பும் தெய்வ வழிபாடும், தேகப்பயிற்சி, காலை மாலை உணவு, மாலை உலாவல், திருநீறணிதல், தெய்வ வணக்கம் ஆதியான 11 விஷயங்களைப் பற்றிக் கூறப் பட்டுள்ளன. தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 4.

அபூர்வ வயித்தியத் தழைகள் :—இத்தலைப் பெயர் புனைந்த வயித்திய நூல் ஒன்று எம் பார்வைக்கு வந்தது. இந்நூலை எழுதியவர் பாளையங்கோட்டை, புதுப்பேட்டைத் தெருவிலிருக்கும் தமிழ்ப் பண்டிதரும், வயித்தியருமான ஸ்ரீமாந் S. சத்தியவாசகம் பிள்ளை அவர்களாவர். மக்களெல்லாம் பொதுவாக வயித்தியர்களின் உதவியை நாடாது தாமே அறிந்து கொள்ளும்படி அரிய வயித்திய முறைகளை எளிய தமிழ் நடையில் பரிபாஷைகளைக் கலவாமல் இவர்கள் எழுதி உபகரித்தது மிகவும் பாராட்டத் தக்கது. இந்நூல் ஒவ்வொரு குடும்பங்களிலும் இருக்குமாயின் உற்ற நண்பனைப் போல மிகுந்த நன்மை பயக்கும் என்று சொல்லுதல் மிகை யாகாது. நூலின் விலை அணா 2.

பத்திராதிபர்,

Cool Breezes at 1/3 of an Anna an hour.

KY-KA KEROSENE OIL FAN.



Fan 20" Diameter

NO { ELECTRICITY, STEAM, CLOCKWORK, GLASS

Dispenses entirely with the need for a Mosquito Net.

Made in London from British Materials of the best quality and finish. The Fan runs at a high speed for sixteen consecutive hours without attention. Motive Power Kerosene. Kerosene consumption one pint in 9 hours.

Price Rs. 155 each. Post Free.

BHAYA HANUMAT PRASAD SINGH, M.L.C., Rais and Zamindar, Athadama (Bastri), says in his letter dated 24th Sept., 1922 :— "The Fan is working to my entire satisfaction. I have been using it since July last and have found it very useful. It is light, strong and portable."

EASTERN ELECTRIC & TRADING CO.

175, Hornby Road, Fort,

: P. O. Box No. 459 : BOMBAY. :

Telegrams: "EASLEKTRIK." Telephone No. 24963.

Also at :—

KARACHI - LAHORE - AMRITSAR.

சம்சார சுகத்திற்கு திவ்ய ஔஷதம்.

ஸ்ரீஜபந்த்

இரண்டு மணி நேரத்தில் அபூர்வ குணம்.

இந்த மருந்து இராத்திரி வேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீர்த்துப் போயிருந்தாலும் அதை இரண்டு மணி நேரத்திற்குள் தவறாமல் கட்டுப்படுத்தி அதிகமான ரதிசக்தியைக் கொடுக்கும். **3** நாள் **2** வேளையும் சாப்பிட்டால், ஸ்வப்பன ஸ்கலிதம், சீக்கிர ஸ்கலிதம் முதலியதை நீக்கும். பதினைந்து நாள் **2** வேளையும் சாப்பிட்டால் துரப்பியாசங்களினால் உண்டாகும் நபும்சகத்வம் போக்கி, அதிகமான யௌவன சக்தியையும், நரம்புகளுக்கு பலத்தையும், சம்சார சுகத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதன் குணத்தை இன்னும் வெளிப்படையாய் எழுதுவதற்கு சென்னை கவர்ன்மெண்டார் அனுமதிக்கவில்லையாகையால், இத்துடன் சுருக்கிவிட்டோம். ஒருமுறை தருவித்து உபயோகித்த பிறகுதான் இதன் குணம் விளங்கும். மருந்து உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். கடிதங்களை ரகஸ்யமாய் வைக்கப்படும். **20** மாத்திரைகள் ஸீசா 1-க்கு ரூ. **2.** வி. பி. சார்ஜ் வேறு. சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும்.

ஆரிய வைத்திய ஆஸ்ரமம்,
நெ. 38, பைராகிமடம் கோவில் வீதி,
ஜீ. டி., மதராஸ்.

படிக்கப் படிக்க இனிக்கும்! நினைக்க நினைக்க மணக்கும்!!

சரீர மர்ம சாஸ்திரம்

பிரசித்தி பெற்ற இந்த அருமையான நூலில் ஸ்திரீ, புருஷர், இல்வுலகில் அனுபவிக்கவேண்டிய சம்சார சுகம், குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கையின் மர்மங்கள் அனைத்தும் ததும்பிக் கிடக்கின்றன. விவாகமானவர்க்கும் இனி விவாகம் செய்து கொள்ளப் போகும் ஸ்திரீ, புருஷர்களுக்கும் வெகு அத்தியாவசியமானது. 50 படங்களுடன் புத்தகம் 1-க்கு விலை ரூ. 1, தபால் செலவு அணா 7.

மாணிக்க விலாசம் பிரஸ்,
அருணாசல முதலி வீதி,
சவுகார்பேட்டை, மதராஸ்.

இது ஒரு அதிசயமல்லவா?

உண்மையில் இது ஒரு அதிசயம்தான். ஏனெனில் எல்லாக் கடியாரங்களுக்கு ஓடுவதற்கு சாவி கொடுத்தால், இதற்கு கொடுக்க வேண்டியது அவசியமில்லை. ஒரு பெரியகடியாரம் சுவரில் மாட்டும்பொழுது சரிமட்டம் பார்த்து வைக்கவேண்டியதாக இருக்கிறது, இதற்கு அது தேவையில்லை. எந்த சுவரில் மாட்டின போதிலும் மணி மிக ரம்மியமாகக் காட்டும். ஒரு நாளும் மணி அதிகமாகவும் கம்மியாகவும் போகமாட்டாது. ஆகையால் இது ஒரு அதிசயமாகும். புதியதாக ஜெர்மனி தேசத்தில் இருந்து வரவழைக்கப் பட்டு இருக்கிறது. இந்த கடியாரம் ஓடவேண்டும் என்று விருப்பம் இருந்தால் கடியாரத்தின் கீழ்ப்பாகத்தில் இருக்கும் ஒரு குண்டை மேல் பாகத்திற்குத் தள்ள வேண்டும். மறுநாளும் இப்படியே செய்யவேண்டும். பார்வைக்கு மிக்க அழகாயிருக்கும். உடனே ஒன்றை வரவழைத்து பாருங்கள். **கடியாரம் 1-க்கு விலை ரூ. 3 0 0.**

வி. எ. எஸ். பாணி அண்டு கம்பேனி,

தபால்பெட்டி, நெ. 17, மதராஸ்.

ஸ்ரீமத் வால்மீகி

இராமாயண வசனம்

பண்டித நடேச சாஸ்திரியாரால்

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு

பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

ஸ்திரீகளும் சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ்வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது. மிக விலையுயர்ந்த கனமான ஆண்டிக் காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய் பயிண்டு செய்திருக்கிறது.

	ரூ.	அ.	ப.
ஆறு காண்டம் ஒரே செட்டு பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரை	15	0	0
சுந்தரகாண்டம் பாராயணத்துக்கு	2	4	0

இன்னும் இதர தமிழ்ப் புஸ்தகங்களும் கிடைக்கும்.

காந்தன் & ராஜன்,

புஸ்தக வியாபாரிகள்,

மைலாப்பூர், சென்னை.

அச்சுவேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும் செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிட வேண்டிய விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,
வெஸ்ட் அண்டு கோ,
மவுண்ட் ரோட்,
சென்னை.

"லோத்ரா"—ஸ்திரீகளுக்கு.

ருது சூலை, அகால பஹிஷ்டை முதலிய கர்ப கோச சம்பந்தமான சகல வியாதிகளையும் கண்டித்து புத்திர பாக்கியத்தை அடையச்செய்யக் கூடிய கைகண்ட அவுஷதம் கேஸரியின்

லோத்ரா ஒன்றே!

விலை 12 அவுன்ஸ் ரூ. 3. 6 அவுன்ஸ் ரூ. 1-10-0.

இந்த அவுஷதம் எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷ்தசாலை, எழும்பூர், மதராஸ்.

உங்களுக்கு ஒரு நோயும் வாராமலிருக்க வேண்டுமா?

அங்ஙனமாஞல்

Hudson's Eumenthol Jujubey.

ஹட்சனின் "யுமேன்தால் ஜுஜுபே"யை

உபயோகியுங்கள்.

அஜீரணத்தைப் போக்க வேண்டுமா? இருமல் ஒழிய வேண்டுமா? இன்புளுயன்ஸா முதலிய ஜுரங்கள் அணுகாதிருக்க வேண்டுமா? தொண்டை, வாய், ஹிருதயம் முதலியவை சம்பந்தமான நோய்கள் வராமல் தடுத்துக்கொள்ள வேண்டுமா? க்ஷயரோகம் கொடிய நோய், பட்டண வாசிகள் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். இவைகளுக்குத் தகுந்த காலன் யுமேன்தால் ஜுஜுபேதான். மேனாட்டு வைத்தியப் பத்திரிகைகள் எல்லாம் இதைப் புகழ்ந்து எழுதியிருக்கின்றன. உடனே ஒரு டின் வாங்கி வைத்துக்கொள்ளுங்கள். குடும்பத்திற்கு இன்றியமையாதது. விலை 1 டின் ரூ. 1-2-0. விலை 1 டஜன் ரூ. 12-0-0.

போஸ்டேஜ் ஒரு டின்னுக்கு 4 அணு; மூன்று டின் வரை 5 அணு, 6 டின் வரை 8 அணு.

சோல் ஏஜெண்டுகள்:—

நைனு முகம்மது அண்ட் சன்ஸ்,
165, பிராட்வே, சென்னை.

அகஸ்தியர்

பரிமள கேசரி தைலம்.

இத் தைலத்தை உபயோகித்து வருவதால் தலையில் எரிச்சல், தலை மயிர்கள் உதிர்கிறது, தலை மயிர்களின் பிளப்பு, தலை மயிர்கள் சிகப்பு நிறமாகிறது, நாசியில் ரத்தம் வடிதல், தலையில் சுண்டுகள் ஏற்படுதல், தலையில் ஏற்படும் விஷத்தினுல் சிரங்குகள் உண்டாகுதல், கண்கள் சிகப்பாகுதல், கண்களில் ஜலம் வடிதல் இன்னும் தலையில் ஏற்படும் சகல வித மான வியாதிகளையும் நீக்கிச் சுகம் தரும். விலை புட்டி 1-க்கு ரூபா 1. V. P. அல்லது C. O. D. இல்லாத ஊர்களுக்கு முன் பணம் அனுப்பவேண்டும்.

துரைசாமி அண்டு கம்பெனி,
58, பெரியண்ண முதலி தெரு,
மிண்டு போஸ்டு, மதறஸ்

ஜெர்மன் சில்வர் டமிளர்



மூடியுள்ளது. மூடியைத் தனியாய் கழற்றக் கூடியது. உயரம் 7 இஞ்சு. விலை 1-க்கு ரூ. 2.

ஜெர்மன் சில்வர் பொம்மைகள்

யானை, குதிரை, மான், சிங்கம் முதலிய மிருகங்கள்.
2½, 3 இஞ்சி உயரம்.
விலை 1-க்கு ரூ. 1-4-0.
ஒரு செட் 6 பொம்மைகளுக்கு ஆர்டர் செய்கிறவர்களுக்கு
விலை ரூ. 6-8-0.

அன்னபூர்ண சில்க் ஸ்டோர்ஸ்,
தசாசுமேத ரோட், காசி.

சிறந்த பதிப்பு! குறைந்த விலை!

ஸ்ரீமத் பாகவதம்

1000 புஸ்தகங்களில் 200 பிரதிகளே மிகுந்திருப்பவை.

ஸம்ஸ்க்ருத காவ்யத்தின் மொழி பெயர்ப்பு; நல்ல தமிழ் வசனம்; இனிய பாசுரங்களும் அதற்கேற்ற தாத்பர்யங்களும்; அழகிய ஹாப்டோன் படங்கள்; கிளேஸ் காகிதம்; பிழை திருத்திய பதிப்பு; முழு காவ்யம் இரு பாகங்களாக முழு காலிகோ பைண்டு; 1056 பக்கங்கள், 328 அத்யாயங்கள், 12 ஸ்காந்தங்கள்.

முந்துங்கள்! முந்துங்கள்!

விலை ரூபாய் 8. போஸ்டேஜ் வேறு.

"லக்ஷ்மி" ஆபீஸ், தபால் பெட்டி 99,
சென்னை.

ELECTRIC POCKET LAMPS.



C-3.

Pocket Cigar Light.

Brass Nickel finished case.

Size over all $2\frac{1}{2}$" x $1\frac{1}{2}$" x $\frac{5}{8}$"

As. **12** each.

Spare Flints Anna **1** each.



ELECTRIC BELL SET.

This set is entirely self-contained. The Dry Battery is directly connected and fitted on base board of Bell.

Complete with 75 feet Twin Wire and Push ready connected, Can be fitted without any electrical knowledge.

Price Rs. **10** each set.

THE COMBINED HAND AND WALL LAMP.



No. 34.

Distributes light over a large area Fitted with Standard Size Pocket Lamp Battery.

Highly finished steel case, enamelled body, bright parts, heavily nickeled, fitted with 2" magnifying lens, and silvered reflector, complete with battery and metal filament bulb.

Price Rs. **4-8** each.

No. 33.

$1\frac{1}{2}$-IN. BULL'S EYE LENS.

Leatherette covered body, complete with battery and metal filament bulb.

Price Rs. **2** each.

Spare Batteries As. 12 Each.

Spare Bulbs As. 6 each.

Illustrated Catalogue free on application.—

C. KRISHNASWAMY NAIDU,

DIRECT IMPORTER,

2/105, Armenian Street, MADRAS.

காசி } அல்லது புண்ணிய பூமி :— காசிமா நகரம் இன்று நேற்றுண்டான பட்டண மல்ல. 4,000 வருடங்களுக்குமுற்காலந் தொட்டே பல்லோர் போற்றும் நல்லதோர் நகரமாய்விளங்கி வருகிறது. ஆகவே அதைப் பற்றிய வரலாறு இந்தியர் களுக்கெல்லாம் பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியதே. இந்நூல் காசிமா நகரத்தின் சரித்திரத்தை சவிஸ்தார மாகக் கூறுவது. காசிமா நகரத்தில் விசுவேசர் ஆலயம், முக்கிய கட்டடங்கள், வடமதுரை, பிருந்தாவனம் ஆலயங்கள் ஆதியான 15 ஆப்டோன் சித்திரப்படங்கள் அடங்கியது. நயம் கிளேஸ் கடிதத்தில் திருத்த முற அச்சிடப் பெற்றது. விலை அணா **12.**

மனோஹரி :—இது பெயருக் கேற்பவே ஒரு மனோஹரமான நாடகம். கற்பின் மகிமை, புருஷ தம்பதிகளின் சுகவாழ்வின் ரகசியங்கள், இல்லற தருமங்கள் முதலியன இதில் தெளிவுற விளக்கப் பட்டுள்ளன. விலை அணா **8.**

பரிமளா :—தமிழுலகெங்கும் பெயர் பெற்ற பிரஜானுகூலன் பத்திராதிபர் எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு அவர்கள் எழுதிய ஒரு துப்பறியும் நாவல். ஆசிரியர் பெயரும் அவர்களது நூல்களின் பெருமையும் தமிழ் நாட்டார் நன்கறிவர். ஆகையால் இந்நூலின் சிறப்பை விரிவாகக் கூறவில்லை. விலை ரூ. **1.**

வர்த்தக யுக்தி :—'திரைகடல் ஓடியும் திரவியம்தேடு' என்றார் ஔவையார். பொருளீட்டுவதற்கு வர்த்தகத்

தைப் போல் சிறந்த தொழில் ஒன்றுமில்லை. ஆனால் தராசுக்கோலும் படியும் எடுத்தவரெல்லாம் வர்த்தகராக மாட்டார். டாக்டர், வக்கீல், இஞ்சினீயர் முதலியோர் அவ்வத் தொழிலுக்கு லாயக்கடைய எவ்வளவோ காலம் படித்துத் தேர்ச்சியடைகிறார்கள். தற்கால வர்த்தகத்துக்குக் கற்றுக் கொள்ள வேண்டிய முறைகளும் விதிகளும் அநந்தம் உள்ளன. அவற்றை யெல்லாம் ஒன்றாகத் திரட்டி இந் நூல் விளக்கிக் கூறுகின்றது. தமிழ் நாட்டு வர்த்தகர் அவசியம் வாசித் தறிய வேண்டியது. விலை அணா 12.

மணிவடக் களவு :—பட்டப் பகலில் போலீசார் முன்னே ஒரு இரத்தின மாலையைத் திருடி மறைந்த ஒரு சுந்தர மாதின் தந்திரச் செயல்களை விளக்கும் ஒரு அற்புதமான துப்பறியும் கதை. விலை அணா 4.

பங்கஜம் :—இது ஒரு அழகிய சிறுகதை. தெள்ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டது. வயது முதிர்ந்தவர்கள் இளம்பெண்களை விவாகம் செய்வதால் ஏற்படும் இடுக்கண்களை விரிவாக எடுத்துக் கூறுவது. விலை அணா 2.

குயில்மொழி :—ஒரு சிறுமியைப் பற்றிய சிறப்பான கதை. தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகளுக்கு இதை விட மன வெழுச்சியைக் கொடுக்கக் கூடிய கதை இல்லவே இல்லை. விலை அணா 2.

எனது காங்கிரஸ் யாத்திரை :—இந்தியாவின் சுதந்திரத்தை விரும்புவோ ரெல்லாம் அவசியம் படித்தறிய வேண்டிய நூல். தற்காலத் தேசாபிமானிகளின் தன்மையை வெட்டனத் திறந்து காட்டுவது. அழகிய நடை. விலை அணா 3.

லக்ஷ்மி தாலாட்டு கோவை :—நான்கு விதத் தாலாட்டுகள் அடங்கியது. தமிழ் நாட்டுத் தாய்மாருக்கு ஏற்றது. விலை அணா 3.

பழமொழித் திரட்டு :—பண்டைக்காலந் தொட்டே தமிழ் நாட்டில் வழங்கும் பழமொழிகளில் சிறந்தவைகளை ஒன்றாகத் திரட்டி அச்சிடப்பெற்றது. விலை அணா 3.

லக்ஷ்மிப் புத்தக சாலை,
தபாற் பெட்டி 99,
சென்னை.

ஓர் உயர்தர தமிழ் ஸஞ்சிகை.

"கிராம வாழ்க்கை"

மாதம் இருமுறை வெளியாகிறது. வருட சந்தா ரூ. 4.

சென்னை ராஜதானி கிராமவாசிகள் உத்தியோகஸ்தர்களின் உரிமைகளைக் காப்பாற்றவும், கிராமங்களின் முன்னேற்றத்தையும் கருதி இப்பத்திரிகை பிரசுரமாகிறது.

கௌரவ பத்திராதிபர் :—

ஸ்ரீமான் டி. ஆதிநாராயண செட்டியார்,

M.L.C. *Bar-at-Law*.

சென்னை இராஜதானி முழுவது முள்ள கிராமங்களில் இப்பத்திரிகை விசேஷமாகப் படிக்கப்பட்டு வருவதினால் வியாபாரிகளின் விளம்பரங்களுக்கு இதுவே நிகரற்ற கருவியாகும்.

மாதிரிப் பிரதி இனாம்.

மானேஜர்—"கிராமவாழ்க்கை"

331, மிண்ட் தெருவு, மதராஸ்.

அமிர்தாஞ்சன்

நோய்களைப் போக்கவல்ல சிறந்த சாதனம்

1924 காலண்டர் 1924

மூன்று நிறங்கள் கொண்ட ஆப்டோன்

மகாத்மா காந்தி படம்

தபாற் செலவு உள்பட தனிப்பிரதி அணா 6.

மொத்த வர்த்தகர்களுக்கு 25 பிரதி ரூ. 4 8 0

" 100 " " 15 0 0

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை.

மன்மத
பரிமள கூந்தல் தைலம்.

இதை ஸ்திரீகள் உபயோகித்துவர, கூந்தல் மிகவும் கறுத்து, நாளுக்குநாள் வளர்ந்து வருவதைக் காணலாம். மூளையிலுள்ள உஷ்ணத்தை நீக்கி குளிர்ச்சியை உண்டாக்கும். கண்களுக்கும் குளிர்ச்சியை உண்டுபண்ணும். ஒருதரம் உபயோகித்தவர்கள் மறுபடியும் வாங்காமல் இருக்கவே மாட்டார்கள்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1-4-0 தபால் சிலவு வேறு.

Ring worm.
சர்வபடை சங்காரி.

இது எவ்வளவு நாள் பட்டதாகிலுமுள்ள படை, சொறி, சிரங்கு இவைகளை 24 மணி நேரத்தில் குணப்படுத்தும். உத்திரவாதம்.

விலை புட்டி 1-க்கு அணு 10.
தபால் சிலவு வேறு.

ரோம சங்காரி.

இதை உபயோகித்த 5 நிமிஷங்களுக்கெல்லாம் சரீரத்தின் எந்தபாகத்திலுள்ள மயிரானலும் சரி உடனே நீங்கிவிடும். யாதொருவித தொந்தரவும் உண்டாகாது.

விலை பாக்கேட் 1-க்கு ரூபா 1.

துருவா அண்டு கம்பெனி,
மதருஸ்.

விக்கிரமாதித்தன் கதை.

32 பதுமைகள் சொல்லிய 32 கதைகளும் அடங்கியது. 632 பக்கம்கொண்டது. தடித்த எழுத்தில் தெளிவாக அச்சிடப் பட்டது. உயர்ந்த காலிகோ பயிண்டு செய்தது. விலை ரூபா 3. தபாற் செலவு வேறு.

லக்ஷ்மி சந்தாதாரர்க்கு மட்டும் விலை ரூபா 2. தாபற் செலவு வேறு. சந்தா நேயர்கள் ஆர்டர் செய்யும் போது சந்தா நம்பரைக் குறித்தனுப்பவும்.

மானேஜர்—“ லக்ஷ்மி ” ஆபீஸ்,
தபாற் பெட்டி 99, சென்னை.

புத்திர சந்தான எண்ணெய்

ஸ்திரீகளின் கர்ப்பஸ்தானத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப் போது வித்தைப் புசித்து வருவதினாலும் மற்றும் பல காரணத்தினாலும் கர்ப்பஸ்தானத்தில் சதை வளர்ந்து சொரிபற்றி இரத்தம் கட்டியிருந்தாலும் மூலச் சுழியில் வாய்வு பித்தம் தங்கினாலும் கருத்தரிக்காது. இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டு நக்கிச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் கர்ப்பஸ்தானத்திலிருக்கும் ஆறுவித குற்றங்களையும் நீக்கி சுத்தப்படுத்தி மறுமாதத்திலேயே கர்ப்பந்தரிக்கும். சிலருக்கு கருதரித்து 2-3-4 மாதங்கள் வரையில் சூலாயிருந்து திடீரென்று உடைந்து போவதுமுண்டு. இப்பேர்க்கொத்த கெர்ப்ப தோஷமெல்லாம் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகி தீர்க்காயுளான கருத்தரிக்கும். புட்டி 1-க்கு ரூ.2.

விலாசம் :— கேட்லாக் இனாம்.

என். வி. கோபால் அண்டு கோ.,
27, வெங்கடேசமேஸ்திரி தெரு,
கிருஷ்ணாங்குளம், மதராஸ்.

சுகசாதனம்

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்

உங்களுக்கு அவசியம் தேவையானது உடனே எழுதுங்கள்.

வைத்திய அனுபதங்கள், வாழ்க்கை மர்மங்கள், ரகசியக் குறிப்புகள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்கள் சம்மந்தமான பலவகை விவரங்கள், இல்லற சார சங்கிகம் ஆகிய பலவும் அடங்கிய ரகஸ்ய ரத்னம் உங்களுக்கு அவசியம் தேவையான புஸ்தகம். விலை யில்லை, தபாற் செலவில்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ., 165,டிப்போ, பிராட்வே,
தபாற் பெட்டி 222, மதராஸ்.

VEST & Co., MOUNT ROAD, MADRAS.

ரெடிமேட் டுயில் ஷர்ட்டுகள்.

முதல் நெம்பர் டுயிலில் கைதேர்ந்த தையற்காரர்களால் தைக்கப்பட்டது. ஆர்டர் செய்யும்பொழுது கழுத்தளவு எழுத மறந்துவிடாதீர்கள்.

ஷர்ட்டு 1-க்கு ரூ. 2, 2-4, 2-8, 2-12.
காக்கி ஷர்ட் ரூ. 2-8, 2-12, 3, 3-8.

பார்சி சேலை (நூல்.)

நைஸான நூல், பட்டைப் போலிருக்கும். ஸிலேட், ஆரஞ்சு பிங் முதலிய பல கலர்கள்.

7 கெஜம் 44" ரூ. 6, 6-8. 8 கெஜம் 44" ரூ. 6-8, 7, 7-8.
9 கெஜம் 44" ... ... ரூ. 7, 8.

வெள்ளைச் சேலை.

இது தற்காலத்துக் கேற்றது: பார்வைக்கு மிக அழகாயிருக்கும். சிகப்பு, கருப்புக்கரை, உடல் சாதா, வெள்ளை டோரியா.

7 கெஜம் 1-க்கு ரூ. 5-12, 6, 6-12. 8 கெஜம் 1-க்கு ரூ. 6, 7-8.

கோகர்ஜான் புடவை.

பலவித இங்கிலீஷ் கலர்கள். 7, 8 கெஜம் புடவை
1-க்கு ரூ. 6-8, 7, 8, 10.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் அவுஸ்,

தபால் பெட்டி 99, - - மதராஸ்.

நம்பிக்கையுள்ள வர்த்தகஸ்தலம்.

கம்பெனி

ஸ்தாபித்த வருஷம் 1900.

கராச்சி பட்டுப் புடவைகள்.

தற்கால நாகரீகத்திற்கேற்றது. அழகான சரிகைக்கரைகள். சகல விதமான கலர்களிலும் கிடைக்கும்.

நெ. 1, 18 முழ புடவை 1க்கு ரூ. **55**.
நெ. 2, „ „ ரூ. **45**.

கராச்சி ரவிக்கை 1க்கு ரூ. 3-8.

பெரிய சேட்லாக இனம்.

கே. எஸ். முத்தையா கோ.,

சில்க் அவுஸ், காசி.

பிராஞ்சுகள் : சென்னை, திருநெல்வேலி.

Printed by M.A. Nellayappar at Vest & Co., Madras and Published by K. S. Sundaram.